திருக்கோயில்

ஏப்ரல்
2003

விலை
ரூ 7.00

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23.03.2002ல் துவக்கிவைக்கப்பட்டுள்ள திருக்கோயில் அன்னதான திட்டத்திற்கு நன்கொடை வழங்கியவர்களின் பெயர் பட்டியல்.

வ.எ.	நன்கொடையாளர்கள் பெயர் – ஊர்	நன்கொடை வழங்கப்பட்ட திருக்கோயில் பெயர்	தொகை
1.	திரு. என். தளவாய் சுந்தரம் அவர்கள் முன்னாள் வருவாய்த் துறை அமைச்சர்	அ/மி. பகவதி அம்மன் திருக்கோயில், கன்னியாகுமரி	50,000/-
2.	- do -	அ/மி. தாணுமாலய சுவாமி திருக்கோயில், சுசீந்திரம்	50,000/-
3.	மாண்புமிகு ஆர். ஜீவானந்தம் அவர்கள் விவசாயத் துறை அமைச்சர்	அ/மி. காயரோகண சுவாமி & நீலாய தாட்சியம்மன் திருக்கோயில், நாகப்பட்டினம்	1,05,000/-
4.	மாண்புமிகு பா. வளர்மதி சமூக நலத்துறை அமைச்சர்	திருக்கோயில் பெயர் குறிப்பிடப்படவில்லை.	1,04,000/-
5.	மாண்புமிகு நைனார் நாகேந்திரன் அவர்கள் மின்சாரத் துறை அமைச்சர்	அ/மி. நெல்லையப்பர் காந்திமதியம்மாள் திருக்கோயில், நெல்லை.	1,00,000/-
6.	மாண்புமிகு எஸ். ராமச்சந்திரன் அவர்கள் பால்வளத் துறை அமைச்சர்	அ/மி. அருணாசலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை	51,000/-
7.	மாண்புமிகு கே.கே. பாலசுப்பிரமணியன் அவர்கள் செய்தி மற்றும் விளம்பரத் துறை	அ/மி. அரங்க நாதசுவாமி திருக்கோயில், திருவரங்கம்.	1,05,000/-
8.	மாண்புமிகு வி. சோமசுந்தரம் அவர்கள் கைத்தறி அமைச்சர்	அ/மி. வரதராஜப் பெருமாள் திருக்கோயில் காஞ்சிபுரம்	51,000/-
9.	டாக்டர் திரு. மைத்ரேயன், M.D.D.M. பாராளுமன்ற உறுப்பினர்	அ/மி. கபாலீஸ்வரர் திருக்கோயில், மைலாப்பூர் சென்னை - 4.	54, 000/-
10.	டாக்டர் திரு எம்.ஏ.எம். இராமசாமி, பி.ஏ. டிலிட். தொழிலதிபர் செட்டிநாடு இல்லம் ராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 28.	திருக்கோயில் பெயர் குறிப்பிடப்படவில்லை	5,00,000/-
11.	திரு ஜேப்பியார் அவர்கள் வேந்தர். சத்யபாமா இன்ஸ்டிடியூட் ஆப் சைன்ஸ் & டெக்னாலஜி, சென்னை.	அ/மி. கபாலீஸ்வரர் திருக்கோயில், மைலாப்பூர், சென்னை - 4.	5,00,000/-
12.	திரு எஸ். ஜெயச்சந்திரன் உரிமையாளர் ஜெயச்சந்திரா டெக்ஸ்டைல்ஸ் 27, ரெங்கநாதன் தெரு. டி.நகர், சென்னை - 17. (மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் மூலமாக வழங்கப்பட்டது.)	அ/மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர். *(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில் வரும்)*	5,00,000/-

திருக்கோயில்

திங்கள் இதழ்

தனி இதழ் : ரூ. 7.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 75.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 1000.00

மாலை 45 திருவள்ளுவர் ஆண்டு 2034 சுபானு - சித்திரை ஏப்ரல் 2003 மணி 4

சிறப்பாசிரியர்

திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திருமிகு த. சுந்தரம் பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமிகு ஆ. குப்புசாமி, பி.ஏ. பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.

முகப்பு

கூத்தனூர் அருள்மிகு மகாசரசுவதி

வாசகர்களுக்கு
தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

பொருளடக்கம்

இந்து மதம் உணர்த்தும் இறை திருமணத் தத்துவம்
- திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப., அரசுச் செயலாளர்

சிவபுராணம் - திருமிகு டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)

சிந்தனை விதைகள்
- திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. (ஓய்வு)

திருஞான சம்பந்தர் பாடியருளிய
இரண்டாம் திருமுறை - முனைவர் த. அமிர்தலிங்கம்

அன்னதான மகிமை - திருமதி இந்திரா ஆராஅமுதன்

பிரார்த்தனை என்பதே பிறருக்காக (நீதிக்கதை)
- கலைமாமணி மா. இலட்சுமணன்

சித்திரையின் சிறப்பு - திருமதி மீனாட்சி கோகுலவாசன்

ஸ்ரீதட்சிணாமூர்த்தி - டாக்டர் டி. செல்வராஜ்

மீனாட்சி அமுதம் - கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

எமவாதனை நீங்க வழிபட வேண்டிய திருத்தலம்
திருவாஞ்சியம் - திருமதி மீனாட்சி கோகுலவாசன்

கல்விச் செல்வம் அருளும் கூத்தனூர் சரசுவதி திருக்கோயில்
- திருமதி ராஜேஸ்வரி விஸ்வநாதன்

உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி: 28279407



இந்து மதம் உணர்த்தும் இறை திருமணத் தத்துவம்

- திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

இவ்வுலகில் உள்ள மாந்தர் அனைவரும் ஆனந்தமாகவே வாழ ஆசைப்படுகின்றனர். அந்த வேளையில் அவர்களை ஆசையும் ஆட்கொள் கின்றது. அதே நேரத்தில் பல்வேறு ஆசைகள் காரண மாகப் பெருந்துன்பத்தையும் சந்தித்து வருகின்றனர். ஆசையே துன்பங்களுக்குக் காரணம் என்று கூறுவர். இன்பமும் துன்பமும் மாறிவருவது மனித வாழ்க்கை யின் மிக முக்கிய அங்கமாகும். அதைத்தான் - புறப்பொருட்கள் மூலம் அடையும் இன்பத்தைத் தான் சிற்றின்பம் என்கின்றார்கள். அதை விடுத்து - ஆசையை விட்டு பரம்பொருளை அடைய அல்லும் பகலும் பாடுபட்டு இடையறாது இன்பம் பெறும் வழி வகை காட்டப்பட்டுள்ளது. அதைப் பேரின்பம் என்பார்கள். அந்த இரண்டிற்கும் ஒரு தேர்வு நிலை வைத்து மனித வாழ்க்கையை சமத்துவப்படுத்தும் உபகரணத்திற்குப் பெயர்தான் மதம் அல்லது மார்க்கம் என்பதாகும்.

பல மதங்கள் பல காலகட்டங்களில் தோன்றி னாலும், அதன் கொள்கைகள் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாததினால் மறைந்து போனதாக வரலாறு கூறு கின்றது. மக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள் ஒத்துப் போகும் நிகழ்ச்சிகள், யதார்த்த அணுகு முறைகள், மக்களால் ஏற்றுக் கொள்ளப்படும் நீதி போதனைகள் இருக்கும் மதம் ஆல மரம் போல் பரந்து விரிந்து மக்களை நல்வழிப்படுத்துவதைப் பார்க்கின்றோம்.

இந்து தர்மம் காலத்தால் முற்பட்டதோடு மட்டுமல்ல, வளைந்து கொடுக்கும் தன்மையோடு மனித வாழ்க்கையின் சாராம்சங்களை அப்படியே பிரதிபலிப்பதால் மக்களால் உள்ளுணர்வோடு ஏற்றுக் கொள்ளப்பட்ட மதமாக உள்ளது. அதில் உள்ள வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், எல்லாம் மனித வாழ்க்கையை நெறி முறைப்படுத்தும் அற்புத மருந்துகள். இந்து தெய்வங் களெல்லாம் உறவுமுறை செப்பி, கணவன் மனைவி யாக, அண்ணன் தம்பியாக, அக்காள் தங்கையாக, மாமன் மருகனாக மக்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கும் காரணத்தால், அத்தெய்வங்கள் மூலம் சொல்லப்பட்ட கருத்துக்கள் மக்களுக்குச் சென்று சேர்ந்தன. ஒவ்வொரு ஆலயங்களிலும் சுவாமிக்கும் அம்பாளுக்கும், பெருமாளுக்கும் தாயாருக்கும் நடக்கும் திருமணக் காட்சி மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைக்கப்பட்ட காட்சி. அதைப் பார்க் கின்ற மனிதன் தன் வாழ்க்கையையும் அதைப் போலவே அமைக்க நினைக்கின்றான். அதுதான் மதம் செய்யும் மகத்தான பணி.

தீமையை ஒழிக்க பெருமாள் பத்து அவதாரம் எடுத்தார் என்பது புராணம்.

1.	மச்சாவதாரம்	6.	பரசுராம அவதாரம்
2.	கூர்ம அவதாரம்	7.	தசரத ராம அவதாரம்
3.	வராக அவதாரம்	8.	பலராம அவதாரம்
4.	நரசிம்ம அவதாரம்	9.	கிருஷ்ணாவதாரம்
5.	வாமன அவதாரம்	10.	கல்கி அவதாரம்.

அனைத்து அவதாரங்களிலும் மனித வாழ்க்கை யின் கூறுகள் பிரதிபலிக்கின்றன.

இராமாவதாரத்தில் இராமபிரான் என்னும் திரு நாமத்தில் தசரதன் மகனாக அவதரிக்கின்றார். சாதாரண மனித வாழ்க்னகயை அனுபவிக்கின்றார் விஷ்ணு பரமாத்மா. மிதிலாபுரியில் சிவதனுசுவை வளைத்து சீதாபிராட்டியை மணமுடிக்க இலட்சுமண ருடன் இராமபிரானை விசுவாமித்திரர் அழைத்துச் செல்கின்றார். இராமபிரான் சிவதனுசு வளைத்து ஒடிக்கின்றார். இராமனுக்கு மணம் முடிக்க ஆயத்த மாகிறது. இராமபிரான் அலங்கரிக்கப்பட்டு மண மேடைக்கு அழைத்து வரப்படுகின்றார். கம்ப நாடன் அவருக்கே உரிய கற்பனை ஓட்டத்தில் கவிதை நயத்தில் இராம பிரான் திருக்கோலத்தை

''மங்கல முழுநிலா மலர்ந்த திங்களைப்
பொங்கு இருங் கருங்கடல் பூத்ததாம்



செங்கிடைச் சிகழிகைச் செம்பொன் மாலையும்
தொங்கலும் துயல் வரச் சுழியம் சூடியே''

எனப் பால காண்டத்தில் பாடுகிறார்.

இராம பிரானின் திருமணம் நிச்சயம் ஆனதும் மிதிலாபுரி மக்களெல்லாம் எறும்புபோலச் சுறு சுறுப்பாகச் செயல்படுகின்றனராம். ஆயத்த வேலைகள் அனைத்தும் செய்கின்றனராம்.

''தோரணம் நடுவாரும் தூணுறை பொதிவாரும்
பூரண குடம் எங்கும் புனைதுகில் புனைவாரும்
கார் அணி நெடுமாடம் கதிர் மணி அணிவாரும்
ஆரண மறைவாணர்க்கு இன்னமுது அடுவாரும்''

என்று கம்பன் வர்ணிப்பான். இன்றும் மண நிகழ்ச்சியில் இப்பணியினைத்தான் இரு வீட்டாரும் செய்வார்கள். தேவியின் கழுத்தில் இராமபிரான் மங்கல நாண் முடிக்கிறார். முப்பத்து முக்கோடி தேவர்களும் வாழ்த்துகின்றனர். வானவர் வாழ்த்துகின்றனர். மக்கள் வாழ்த்துகின்றனர். கம்பன்

''ஆர்த்தன பேரிகள் ஆர்த்தன சங்கம்
ஆர்த்தன நான்மறை ஆர்த்தன வானோர்
ஆர்த்தன பல்கலை ஆர்த்தன பல்லாண்டு
ஆர்த்தன வண்டினம், ஆர்த்தன வேலை''

என அனைவரும் இராமபிரான் திருமணத்தை வாழ்த்தியதாகச் சொல்லுகிறார்.

திருப்பாவை பாடிய ஆண்டாள் பெருமாளை தம் மணாளனாக அடைய பாடுகின்றார். நாச்சியார் திருமொழியில் ஆண்டாள் கனாக் காண்கின்றார்.

''வாரணமாயிரம் சூழவலம் வந்து
நாரணன்நம்பி நடக்கின்றானெதிர்
பூரணப் பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ நான்''

''மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரை தாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழீ நான்''

என்று ஆண்டாள் கனவு காண்கின்றாள்.

''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாம்
ஆட்செய்வோம்''

என்று பெருமாளைச் சேவிக்கின்றார்.

எனவே நமது மதச் சடங்குகளும் சம்பிரதாயங்களும் சமுதாய வாழ்க்கையோடு அண்டி ஒண்டிப் போவதால் பண்பட்ட இறைநெறி தவறாத இரை தேடும் - அதே நேரத்தில் இறையையும் தேடும் சமுதாயமாக இருப்பது மகிழ்ச்சிக்குரியது.

சைவ சமயக் காவியங்களிலும், இலக்கியங்களிலும் கூட இதேபோல் கடவுளரின் திருமணச் சடங்குகள் விவரிக்கப்பட்டுள்ளன. திருவிளையாடல் புராணத்தில் மீனாட்சி சோமசுந்தரேசுவரர் திருமணக் காட்சிகள் நன்கு கோலாகலமாக விவரித்துப் பாடப்பட்டிருக்கக் காணுகின்றோம்.

''ஆடினார் அரம்பை மாதர் விஞ்சையர் அமுத கீதம்
பாடினார் ''அர'' என்றார்த்துப் பரவினார் முனிவர் வானோர்
மூடினார் புகைப்போர்வை கணத்தவர் முடிமேற் செங்கை
சூடினார் பலரும் மன்றல் தொடுகடல் இன்பத்து ஆழ்ந்தார்''

''சுற்று நான்மறைகள் ஆர்ப்பத் தூரியஞ் சங்கம் ஏங்கக்
கற்ற நான் முகத்தோன் வேள்விச் சடங்குநூல் கரைந்த வாற்றான்
முற்றமங்கல நாண் சாத்தி முழுதுல கீன்றாள் செங்கை
பற்றினன் பற்றிலார்க்கே வீடருள் பரம யோகி.''

இறைவன் இறைவியை இவ்வாறு திருமணம் புரிதலின் தத்துவம் என்னவென்றால் மாந்தர் யாவரும் இல்லற இன்பம் கண்டு அதன் வாயிலாக முக்தி இன்பம் பெறுதல் வேண்டும் என்பதை உணர்த்துவதற்கே ஆகும்.

இதனைத் திருஞானசம்பந்தர் தம் தேவாரத்தில்

''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணின் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே''

என்று இல்லறமே நல்லறமாவதை இறைவரே இறைவியோடு இருந்து உணர்த்துவதாகப் பாடியிருக்கின்றார்.

அப்பரடிகள் தாம் இல்லற வாழ்வில் ஈடுபடா விடினும் இறைவன் அப்பனாகவும், அம்மையாகவும், மாமனாகவும் மாமியாகவும் கூட மக்களுக்கு அருள் புரிவதை

''அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓருரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையாய் என்நெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வம்நீயே''

எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.

பெரிய புராணத்தில் சுந்தரர் பாவை நாச்சியாரைக் கண்டு பரவசப்படும் தன்மையை

''கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியோன்என்று அதிசயித்தார்''

எனச் சேக்கிழார் வருணித்துள்ள பாடல் அனைவரும் படித்து மகிழ வேண்டிய பாடலாகும்.

சுந்தரமூர்த்தி நாயனார் ஒரு மணத்தைத் தடுத்தாட்கொண்ட இறைவர் வாயிலாகவே ஒன்றுக்கு இரண்டாகத் திருமணங்கள் புரிந்துகொண்டு தம்பால் ஊடல் கொண்ட பரவையாரிடம் இறைவரையே தூதுபோக்கி இறைவரைத் தம் தோழராய்க் கொண்டு ''தம்பிரான் தோழர்'' என்ற திருப்பெயரையே கொண்டு விளங்கிய சிறப்பினை நாம் உய்த்துணர்ந்து மகிழலாம்.

மாணிக்கவாசக சுவாமிகளும் துறவு நெறியில் நின்றவர் ஆயினும் இறைவர் - இறைவி திருமணத் தத்துவத்தைத் ''திருச்சாழல்'' திருப்பதிகத்தில் வினா-விடையாக அமைத்து நமக்குத் தெளிவுறுத்துவதைக் கண்டு மகிழலாம்.

''தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ?
பெண்பால் உகந்திலனேல் பேதாய்! இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ''

''மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடி?



உலகறியத் தீவேளா தொழிந்தனனேல்
உலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாம்
கலங்கிடும்காண் சாழலோ''

இவ்வாறான சான்றுகளால் மக்கள் இல்லறம் வாயிலாக வீடுபேறு அடையலாம் என்று உணர்த்தும் வகையிலேயே இறைவர் - இறைவி திருமணம் நடைபெறுவதை நாம் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

கணக்கு கற்பிக்கும் ஆசிரியர் தம் கை விரல்களை நீட்டியும் மடக்கியும் மாணவர்க்குக் கூட்டவும் கழிக்கவும் கற்பிப்பதைப் போலவே இறைவர் - இறைவியும் தாம் திருமணம் கொண்டு மாந்தரும் அவ்வாறே இல்லறம் கண்டு இனிதே வாழக் கற்பிக்கின்றனர் என்பதை நாம் தெளிந்து உணரலாம்.

கந்தப்புராணமும் இவ்வாறே சிவன் - பார்வதி திருமணத்தையும், முருகர் - தெய்வானை, முருகர் - வள்ளி திருமணத்தையும் விவரித்துக் கூறுகின்றது.

திருமணத்தில் மணமக்களை மூத்தோர்கள் ஆசீர்வதிப்பது ஒரு அழகிய காட்சி அல்லவா! திருமணம் கொண்டு வலம்வந்து வணங்கும் முருகப் பெருமானையும், தெய்வானையையும் பார்வதி - பரமேசுவரர் இருவரும் ஆசீர்வதித்த அருமையைக் கந்தப்புராணம்,

''அடித்தலத்தில் வீழ் மக்களை இருவரும் ஆர்வத்து
எடுத்து அணைத்து அருள் செய்துதம் பாங்கரில்
இருத்தி
முடித்தலத்தினில் உயிர்த்து உமக்கு எம்முறு
முதன்மை
கொடுத்தும் என்றனர் உவகையால் மிக்க
கொள்கை யினார்''

என எடுத்துக்காட்டுகின்றது.

திருப்பரங்குன்றம் சந்நிதானத்தில் இன்றும் முருகப் பெருமான் திருக்கல்யாணத் திருக்கோலத்தைத் தரிசிக்கும்போது அருகிலேயே சத்தியகிரீசுவரரையும், விஷ்ணு துர்க்கையையும், சோமாஸ்கந்தரையும், கற்பக விநாயகரையும், பவளக்கனிவாய் பெருமாளையும், திருமகளையும், ஆஞ்சநேயரையும், நாரத மகிரிஷியையும், தேவேந்திரனையும் சந்நிதானத்தில் ஒருசேரக் கண்டு மகிழலாம்.

இவற்றிலிருந்து இல்லறமே நல்லறம் ஆவதையும், இல்லறத்தை நல்லறமாய் ஏற்று உற்றார் உறவினர் சூழ வாழும் வாழ்வே பேரின்பவாழ்வு ஆவதையும் இந்துமதம் இனிதே எடுத்து இயம்புவதைத் தெள்ளத் தெளிவாக நாம் தெரிந்து கொள்கிறோம்.

***

சிவ புராணம்

– "திருமந்திரச் செம்மல்" திருமிகு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப (ஓய்வு)

கோகழியாண்ட குருமணி தன்தாள் வாழ்க!

தான் அறியாமலே என்றென்றும் தன்னோடு சேர்ந்திருந்தும் தன்னை நடத்திச் செல்கின்ற ஒன்றாக அமையக்கூடியதோர் நிலையில் இமைப்பொழுதும் தன் உள்ளத்தை விட்டு நீங்காத எம் பெருமானின் திருவடிகளை வாழ்த்திய மணிவாசகப் பெருமான், கட்டப்பட்ட மலங்களை நீக்கி, திருவடி வீழ்ச்சியாக அனுபவ வெள்ளத்தில் அழுத்திய ஞானாசிரியராகக் கண்டு இறைவனை வாழ்க என் வாழ்த்துகிறார்.

மன்னரவையில் அமைச்சராகப் பணிபுரிந்த மணிவாசகர், நாட்டின் நலனுக்காக பெருந்துறையிலுள்ள கடற்கரைப் பகுதியிலே குதிரைகள் வாங்கச் சென்றார். ஒரு புறம் குதிரைகள் வாங்கக் கொண்டு வந்த நிதிக் குவியல்; மற்றொரு புறம் வேறொரு சிந்தனை. சிந்தித்தவாறே கோகழி இடத்தை அடைகிறார்.

கோகழி என்னுமிடம் பெருந்துறையின் அருகில் உள்ளது. கோகழி இடத்தில் அமர்ந்த போது உள்ளத்திலே பாரம் குறைந்த ஆழ்ந்த உணர்வினைப் பெறுகிறார். திருவாரூர் அருகே அமைந்துள்ள அவ்விடத்தில் அனுபவத்தில் ஆழ்ந்த சைவர்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பது வரலாறு. அங்கு ஆன்ம விசாரணை செய்கிறார் மணிவாசகர். தான் யார்? ஞானங்கள் என்ன? அறிவு எது? அகத்தே யார்? இவ்வாறு மீண்டும் மீண்டும் கேள்விகளைத் தொடுத்துக்கொண்டே போகிறார். அங்குள்ள குருந்த மரத்தடியிலுள்ள பீடத்தில் திடீரென ஞானாசிரியரைத் தரிசித்தார். அவரது உள்ளத்தே அருள் புகுகிறது.

கோகழி எனும் சொல்லை அகமுகமாக நோக்குமிடத்து, கோ-பசு: கழி - கழித்தல். பசுவின் தன்மை பாசத்தால் கட்டப்பட்டது. பாசமாவது மும்மலங்கள். அவை ஆணவம், மாயை, கன்மம் என்பன. மூலமலம் ஆணவம்; கன்மம், மாயை பின்னர் சேர்ந்தது. இதனை நீக்கியருள ஞானாசிரியர் வேண்டும். அழுக்கை நீக்க அழுக்கை பயன்படுத்துவதைப் போல ஆணவ மலம் நீங்கமாயையுடன் உடலைச் சேர்த்து கருவிகளை கன்மம் என்று சொல்லக்கூடிய வினைகளோடு கூட்டுவிக்கிறான். உயிரிடமிருந்து மலங்களை நீக்கும் முறையில் ஈடுபடும் போது நம்மால் செய்ய முடியாத நிலையில் துணையாக இருப்பவன் ஞானாசிரியன்.

சாத்திர நெறியிலே நோக்கும்போது ஏதோ ஒன்று தன்னைத் தாக்கித் தடுத்து அழைத்துச் செல்கிறது. அதிலே ஒரு மறைப்பு இருக்கிறது. அம் மறைப்பை திரோபவம் என்று சைவ சித்தாந்தம் பகரும். திரோபவத்தை அறியாமை என்றும் சொல்லலாம். அறியாமைக்கு மூல காரணமே ஆணவம். தன்னுடைய எண்ணங்கள் சரியானது என்ற அடிப்படையிலே இயங்குவது ஆணவம். ஆணவம் என்ற இருளுக்குச் சற்று வெளிச்சம் வேண்டும். இவ் வெளிச்சத்தைப் பெறவேண்டும் என்பதற்காக, உடல், கருவிகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அடிப்படையாக சக்தியொன்று இறைவனுக்கு இருக்கிறது. உயிர் சக்திக்கும் இறைசக்திக்கும் வேறுபாடு உண்டு. இறைச் சக்தி எல்லையற்றது. உயிர் சக்தி எல்லைக்குள் இயங்குவது. உயிர்ச்சக்தியை ஆணவம் தான், தனது என்ற வட்டத்தில் கட்டுப்படுத்துகிறது. உறவு அடிப்படையில் சிலவற்றைக் காண்கிறோம்: புற வெளிச்சம் ஏற்பட்ட நிலையில் பார்த்தல், கேட்டல், நுகர்தல் போன்ற சக்திகள் கிடைக்கின்றன. இவை மாயா சக்திகள். இவ்வாறு ஆறு கோடி மாயா சக்திகள் இயங்குகின்றன என்பர் மணிவாசகப் பெருமான். ஐம் புலன்கள் வாயிலாக அனுபவம் பெற பெற தன்னிலை வெளிச்சமும் உணர்ந்து கொண்டே போகிறது, உயிர். இன்பத்தை விட துன்பமே அதிகம் என்று நினைக்கும் தருவாயில் இதன் காரணம் ஏன் என்ற கேள்வி எழும் பட்சத்திலே ஏதேனும் ஒரு பிறவியிலே தீர்வு ஏற்படும் என்று சாத்திரம் பகர்கிறது.

மேலும் திரோபவம் என்னும் மறைப்பு திருவடி வீழ்ச்சியிலே அந்தக்கரணங்கள் போக விடாமல் தடுக்கின்றது. உயிரின் ஆணவத்தோடு உள்ள பிணைப்பே இதன் காரணம். ஆணவமே ஒரு ஜடம். ஒருவன் இயக்கினால் தான் அது இயங்கும். இயக்குகின்ற சக்தியே திரோபவம். இச்சக்தி மறைத்தல் தொழில் செய்கிறது. இத்தொழிலை உயிரை அசுத்த மாயையோடு இயைந்து ஆட்டுவிக்கின்றான் எம் பெருமான். எனவே, அப்பரடிகள்,



'ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே'

என்கிறார். இந்த நிலையிலே உயிர் பேசத் தொடங்கு கிறது. அமைதியாக தனக்கென்று ஒரு நிலை உருவாக்கிக் கொண்டு தம்மையே கேள்வி கேட்க விட்டு விடை கிடைக்க அமைதியாக (மோனம்) காத்துக் கொண்டிருப்பது தான் உண்மையான தியானம். கருவி கரணங்களுக்கு விடுமுறை கொடுத்து விட்டு, சக்தி தாக்குறும் நிலை ஏற்படும்போது தன்னைச் சுற்றியுள்ள வேலி தடுக்கும் நிலையிலே ஒவ்வொரு கம்பியாக எடுத்து வேலியைத் தகர்த்து, எல்லா யிடங்களிலும் அத்துணை நல்லெண்ணங்களையும் ஒன்று சேர்த்து, அறியாத நிலையில் அறிவைக் கொடு என்று இறைவனை யாசிப்பதே உண்மையான தியானம்.

இத்தகு தியானத்தில் அமர்ந்திருந்த மணிவாசகப் பெருமானுக்கு ஞானாசிரியர் தரிசனம் கிடைக்கின்றது. கிடைத்த இடம் கோகழி. ஞானாசிரியர் முத்தாக ஒளிக்க வேண்டும். சோதியாய் இருக்கக்கூடிய மாணிக்க மணியாய் இருக்க வேண்டும். அறிவை எல்லா இடங்களிலும் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள். இவர்கள் வித்தியா குருக்கள். ஒரு சிலர் நெறியிலே ஈடுபடுத்துகிறார்கள். இவர்கள் கிரியா குருக்கள். இவர்களுக்கும் மேலானவர் ஞான குரு. அக்கருவிகளின் ஆற்றலை பெருக்கக்கூடிய அறிவால் உலகம் பற்றியும் உறவுகள் பற்றியும் அறிந்து கொள்ளலாம். கல்வி நமது தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

உயிர் பொறுத்த வரையில் இருள் நிலை. இறைவன் உள்ளத்திலே விளக்கேற்றி வைக்க வேண்டும் என்று விரும்பும் போது உயிருடன் பிணைந்த மலங்களை நீக்கும் முறையில் ஈடுபடும் போது நம்மால் செய்யமுடியாத நிலையில் உதவியாக இருப்பவன் ஞானாசிரியன். இறையனுபவத்தில் மூழ்க விரும்பித் தயாராக இருக்கும் தருவாயில், உயிர்களின் முதிர்வு நிலையில் தக்க ஞானாசிரியர் தகுந்த நிலையில் அமைவார். அப்படித்தான் மணிவாசகருக்கு ஞானாசிரியர் தரிசனம் கிட்டிற்று. 'நமசிவாயம்' என்ற நாதம் அவரது உணர்வைத் தொடுகிறது. ஞானாசிரியர் வருகிறார். இருவரும் சந்திக்க நயன தீட்சை கிடைக்கிறது. ஆச்சாரியரின் கண்கள் இவர் மீது பட்ட மாத்திரத்தில் அச்சக்தி உடல் மீது படுகிறது. உடலில் பாய்கிறது. திருவடிகளைத் தொட்டு வணங்குகிறார். தொட்ட மாத்திரம் பரிச தீட்சையால் தலையில் இன்ப உணர்வு பாய்ந்து தலை முழுவதும் பரவுகிறது. காதில் மந்திர தீட்சையாக மந்திரம் ஓதப்படுகிறது. இவ்வாறு மணிவாசகப் பெருமான் மூன்று தீட்சைகளும் பெற்று முழுமையாக்கப்படுகின்றார். எனவே அவர், தானே தனித்து எம்பிரான் தனை சந்தித்தேன் என்றும், இணையான திருவடிகள் தன் தலை மீது பட்டதுமே சுற்றம் முழுவதும் துறந்தொழிந்ததாகவும் குறிப்பிடுகின்றார். பற்றி நின்ற பொருள் விலக வேண்டும் என்ற ஆசை உந்தப்பட்டு பிரியத் தொடங்குகிறது. பற்றி னின்று விலகி அருளை நாடிச் செல்வதே ஞான குரு அனுபவம்.

ஞானாசிரியனாக வருகை தருபவர் மும் மலங்களை நீக்க வேண்டியவர், சிவமாம் தன்மை பெற்றவர். 'சிவம்' சுடர் விட்டு பிரகாசிக்கக்கூடிய அனுபவத்தைப் பெற்றவனாகின்றார் மணிவாசகர். அவரது உடலிலே உணர்வு அலைகள் பாய்ந்து கொண்டேயிருக்கின்றன. ஞான அனுபவம் உண்டா கிறது. இந்த அனுபவத்தை ஞானாசிரியர்கள் தான் தர முடியும். இது எதிர் பாராத நிலையில் வரும். தகுந்த நேரத்தில் உள்ளே வந்து உணர்த்தச் செய்து அவனே இவனென்று இறைவன் பக்குவப்படுத்தி விடுவான் என்கிறது சாத்திரம். இக்கருத்தைத் 'தானே வந்து என் உளம் புகுந்து அடியேற்கு அருள் செய் தான்' என்ற வரிகளில் வெளிப்படுத்துகிறார் மணி வாசகர். நான் பொய்: என் உள்ளம் பொய் : ஆனால் அழுதால் பெறலாமே என்கிறார். நாடகத்தால் மிக நெருங்கியவன் போல் நடிப்பதாகத் தன்னையே சாடிக்கொள்கிறார். அருட்தாக்கத்தால் மின்னல் போல் இறைவன் திருவருள் உள்ளத்திலே ஓடி மறைகிறது. மறைந்த நேரத்திலே மிக வேதனைப் படுகிறார். சிறு குற்றமும் இமாலயக் குற்றம் போலத் தோன்றி நினைந்து நினைந்து வருந்தி எப்போது இணை வாய் என்று உருகுகிறார். இந்நிலையில் அறியாமை யில் இருக்கக் கூடிய நிலை மாறிச் சற்று மனம் அமைதியைப் பெறும் போது மனதில் நிற்பவர் ஞானாசிரியர்.

அமைதி பெறும்போது எப்படி திருவடிகளைச் சேர வேண்டும் என்று நினைப்பதால் 'நான்' 'எனது' என்ற முனைப்பு தாக்காது. மனதில் தோன்றும் எல்லாவற்றினையும் விட்டு விட வேண்டுமென்ற வைராக்கியம் துறவிக்கு வேண்டும். துறந்தவாறு தன்னை ஞானாசிரியரின் திருவடிகளில் சமர்ப்பிக்க வேண்டும். துறவு நிலையை உயர்த்தி தருபவர் ஞானாசிரியர். அவனே இவன் என்று எண்ணும் போது உள்ளங்கள் ஒன்று சேர்ந்திருக்கும். ஞானாசிரி யர் தரும் பரிசோதனைகளுக்கும் ஆய்வுகளுக்கும் உட்பட்டு அதில் வெற்றி பெறவேண்டும். காலம் கடைக்கணிந்திருந்தேன் என்றார் அப்பர் அடிகள். 'காலம் உண்டாகவே காதல் செய்துய்மின்' என்பர் மாணிக்க வாசகர். சுந்தரமூர்த்தி நாயனார் திரு வதிகைக்குச் செல்லும்போது உள்ளே போகத் தயங்கி சித்தவட மடத்தில் தங்கி உறங்குகிறார். தலையைத் தொடுவது போல உணர்வு ஏற்படுகிறது. ஒருவரது கால் இவர் சிரசின் மீது படுகிறது. ஒன்றிரண்டு முறை கால் தலை மீது படுகிறது என்று எச்சரித்தார். எனினும் மீண்டும் மீண்டும் படுகிறது. கொதித்தெழுகிறார். 'இன்னமும் தன்னை அறிந்து கொள்ளவில்லையே' என்று படுத்திருந்தவர் கூறி மறைந்து விட்டார். தன் உணர்வு பெற்ற சுந்தரர், இறைவர் திருவடிகள் பட்டதே! இதை அறியாமல் போனேனே என்று தன் செயலுக்காக திகைக்கிறார். மூலபண்டாரம் ஆக்கினான் என்பார் மணிவாசகப் பெருமான்.

மூலபண்டாரமாவது உடலை அருட்பாண்ட மாக்குவது. உடலை அருட்பாண்டமாக ஆக்கும் நிலையில் நம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும். அந்நிலையில் ஞானாசிரியர் அறியாமையை நீக்கி அறிவைக் கொடுத்து ஞான சொரூபமாக, ஞான உடலாக தோன்றி உள்ளத்திலேயுள்ள சுமைகளை விடுவிக்க உணர்வினைக் கொடுப்பார். எம்பெரு மானும் ஞானாசிரியராக வரலாம்.

மற்றும் எம்பெருமான் மந்திர சொரூபமான, கற்பனைக்கு அப்பாற்பட்ட சச்சிதானந்தமாக இருக்கக் கூடிய கருப்பொருள். இக்கருப்பொருள் முழுமை யாக வெளிப்படுவது குருநிலையில் தான். உலகில் ஆன்மாக்கள் உய்ய தோன்றாத் துணையாக அமைந்து ஆன்மாக்களோடு இணைந்து இயங்கி, நினைந்து நினைந்து விருப்பத்தோடு கலந்து கொள்ளும் வாய்ப் பினை ஏற்படுத்திக் கொள்ளும் போது குருவமைப் பின் வாயிலாக பரம்பொருளோடு சேர்கிறோம். குரு முகமான பரம்பொருள் அனுபவ வெளிப்பாடே இருள் கடந்த வெளிச்சம். இருளிலிருந்து வெளிச்சத் திற்கு கொணர்ந்த இத்தகு ஞானாசிரியரைத் தான் தரிசித்தார் மணிவாசகப் பெருமான். ஞானாசிரிய ரோடு ஒன்றி நின்று பெருந்துறையிலிருந்து அருட் துறைக்குச் சென்று பொருந்துகிறார். பொருந்திய மாத்திரம் உண்மை அனுபவம் முழுமையாகக் கிடைக்கப் பெறுகிறார். பெறுதலின் வாயிலாக இயல் பான பாசத்தால் கட்டுப்பட்டு இயங்கிய தன்னிலை யிலிருந்து நீக்கம் பெறுகிறார். உயிரினின்று பாசக் கட்டினை நீக்குபவர் ஞானாசிரியர்.

இந்நீக்கம் ஞானாசிரியரை உணர்ந்து அனுபவித்தலால் வந்தது. ஞானாசிரியரை உணர்தலா வது இறைமையை உணர்தல். இறைமையை குரு மணி என்று குறிப்பிடுகிறார் மணிவாசகப் பெருமான். மணி, மாணிக்கத்தைக் குறிக்கும். மாணிக்கம் செந்நிற முடையது. இது சிவத்தைக் குறிக்கும். மரகதம் பசுமை யான பச்சைநிறம் பொருந்திய சக்தியைக் குறிக்கும். இக்கருத்தைத் திருமூலர்,

'மாணிக்கத்துள்ளே மரகத சோதியாய்; மாணிக்கத்துள்
மரகத மாடமாய்'

என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு அருளை நாடிச் செல்வது ஞானகுரு அனுபவம். இவ்வனுபவத்தில் மணிவாசகர் எம்பெருமான் செம்மேனி அம்மானாக ஒளிர்வதைக் கண்டு அனுபவித்து, இறைவனை ''கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க!'' என்று எம்பெருமானை வாழ்த்தி வழிபடுகிறார்.

***

சிந்தனை விதைகள்

- திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.

செயலாளர் - உறுப்பினர், வரிசீரமைப்பு மற்றும் வருவாய் மேம்பாட்டுக்குழு, தமிழக அரசு

(முன் தொடர்ச்சி)

கடவுள்

50. இறைவனைப் போன்றே இறைவனுடைய சட்டம் தெரியும் படியும், புரியும்படியும் இல்லாமல் புதிராக இருப்பதால் தீயவர்கள் இன்புற்று இருப்பதாகவும், நல்லவர்கள் துன்பப் படுவதாகவும் கருத வேண்டிய மயக்கம் ஏற்படு கிறது.

51. சுற்றி விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தையை அதன் நன்மைக்காகப் பள்ளியில் சேர்க்கும் பெற்றோர்களை, குழந்தையைப் பள்ளி யில் சேர்த்தது தவறு என்று யாரும் பழிப்ப தில்லை. வாழ்க்கையில் துன்பம் ஏற்படும் பொழுது மட்டும் இறைவன் என்னை ஏன் படைத்தான் என்று பழித்தால் அது வருத்தத் தின் பிரதிபலிப்பேயன்றி வேறொன்றும் இல்லை.

52. கண்ணுக்குத் தெரியாத தென்றல் தீண்டும் இன்பத்தை யாரும் பெறலாம். கண்ணுக்குப் புலப்படாமல் இருந்து இறைவன் தீண்டும் இன்பத்தை இறையடியார்கள் மட்டுமே பெறு வார்கள்.

53. இறைவனுடைய சக்திக்கு இணையான சர்வசக்தி வேண்டும் என்று இறைவனிடமே பிறருக்கு உதவி செய்யும் விருப்பத்தால் கேட்டால்கூட அதைப் பேராசை என்றே கருத வேண்டியிருக் கிறது. இறைவனையே துறவறம் போகச் சொல்ல யாருக்கும் உரிமையில்லை.

54. திருடன் சொல்லாமல் வருவான். சந்நியாசி யாகும் சம்சாரி சொல்லாமல் செல்வான். இறைவன் கேட்காமலே சொல்லாமலே செய் வதைச் செய்வான்.

55. இறைவன் ஓய்வெடுப்பதில்லை. அதனால் அவருக்கு விடுமுறையும் கிடையாது. இடை வேளையும் கிடையாது. அடியவர்கள் எந்த நேரத்தில் கூப்பிட்டாலும் எந்த ரூபத்திலாவது வந்து உதவி செய்திடுவார். அடியவராவதற்கு கனவிலும் நனவிலும் அவரது நினைவாகவே இருக்க வேண்டும்.

56. இறைவன் யாருக்கும் சமாதானம் சொல்ல வேண்டியதில்லையாதலால் ஒரு பக்கம் வெள்ளத் தாலும் இன்னொரு பக்கம் வறட்சியாலும் மக்களை அல்லல்பட வைக்கிறாரா என்று எண்ணத் தோன்றும்.

57. திருட்டு திருக்கோயில்களில் மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் நடக்கிறது. கடவுளாலேகூட திருக் கோயில்களில் நடக்கும் திருட்டு தடுக்கப்பட வில்லையென்று பாமரர்களால் எண்ணத் தோன்றும். திருக்கோயில் திருட்டை மட்டும் தடுத்தால் அவருடைய சர்வவியாபகத் தன்மை பொய்யாகிவிடும். தவம் தரும் ஞானத்தார்க்கே இதன் உண்மை தெரியும்.

58. ஒருமுறை இறைவனின் அன்புக்குப் பாத்திர மாகிவிட்டால் நம்முடைய பெயர் அவருடைய் இதயத்தில் பதியப்பட்டு விடுகிறது. நாம் தவ றேதும் செய்தால் உடனே நம்முடைய பெயரை அவர் பட்டியலில் இருந்து நீக்கி விடுவதில்லை. திருந்துவதற்கு வாய்ப்பளித்துவிட்டு திருந்தி விட்டால் நம் பெயரை பட்டியலில் தக்க வைத் துக் கொள்வார். இறையன்பர்களை இறை வன் விரைவில் விட்டுப் பிரிவதில்லை.

59. எல்லோர் இதயத்திலும் இறைவன் குடி கொண்டிருக்கிறார் என்றாலும் இறைவனே கதி என்று இருப்பவர்களுக்குத்தான், தான் இருப்பதை அறியும் வண்ணமும் உணரும் வண்ணமும் காட்டிக் கொள்கிறார்.

60. கடவுள் என்றால் கடவுள்தான். முழுமுதற் கடவுள் யார் என்ற சர்ச்சையில் ஆத்மசாதகன் தன்னைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளத் தேவை



யில்லை. நமக்குக் கதிமோட்சம் அளிக்க வல்ல கடவுள் ஒருவரே என்று நினைத்து அவர் சிந்தனையாகவே இருக்க வேண்டும்.

61. எப்படி நன்கு பயிலும் மாணவனுக்குக் கல்லூரியே உதவிச் சம்பளம் வழங்குகின்றதோ அதுபோன்று இறைநாட்டம் மிகுந்துள்ள ஒருவனுக்கு இறைவனே உபாயமாக இருந்து உதவி செய்கிறார்.

62. கடவுள் அநாதி, உயிர்களும் அநாதி, மூலப் பிரகிருதியும் அநாதி. இந்தச் சூழ்நிலையில் உயிர்கள் இல்லையென்றால் கடவுளுக்கு வேலையில்லாமல் போய்விடும். அதனால் கடவுள் உயிர்களுக்குச் செய்யும் உதவி கருணையுடன் சேர்ந்த கடமைபோல் ஆகிவிடுகிறது.

63. ஒரு ஆண் ஒரு பெண்மீது காதல் கொண்டால் காதலிக்குப் பரிசு கொடுக்க வேண்டி வரும். ஒரு ஆணோ அல்லது பெண்ணோ ஆண்டவன் மீது காதல் கொண்டால் அவர் பரிசு கொடுப்பார்.

64. ஆரோக்கியத்திற்கென்றும் ஐஸ்வர்யத்திற்கென்றும் முக்திக்கென்றும் தனியாகக் கடவுளர்கள் கிடையாது. கடவுள் எல்லாவற்றிலும் சர்வவல்லமை படைத்தவர்.

65. அழுத பிள்ளை பால்குடிக்கும் என்பார்கள். அழுதாலும் அழாவிட்டாலும் குறிப்பறிந்து குறித்த நேரத்தில் தாய் தன்பிள்ளைக்குப் பால் ஊட்டுவாள். அதுபோன்று கேட்டாலும் கேட்காவிட்டாலும் கடவுள் மனிதர்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்து கொண்டிருக்கிறார்.

66. இல்லாத மூலப்பொருள் ஒன்றை மனிதன் புதிதாக சிருஷ்டிக்க (தோற்றுவிக்க) முடியாது. இருப்பதை வைத்துக் கொண்டு தன்னுடைய அறிவுத் திறமையால் அதற்கு வெவ்வேறு பயனைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அல்லது இருப்பதை வெளிக்கொணர்ந்திருக்கிறார்கள். இதில்கூட கடவுளின்பங்கு இருக்கிறது.

67. துன்பத்தைத் தாங்க முடியாத பலர் இறைவனைக் ''கொடியவன்'' என்று சொல்கிறார்கள். நாம் வெறுத்தாலும் நமக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக நம்மைச் சுற்றிச் சுற்றி வரும் ''கொடி அவன்'' என்பதை அவர்கள் உணர்வதில்லை.

68. இறைவனிடம் நமக்கு மிச்சம் சொச்சம் இன்றி முழுமையான அச்சம் ஏற்பட்டால் அவர் நம் அச்சத்தைப் போக்கி நம்மை உச்சத்திற்கு ஏற்றி விடுவார்.

***

(தொடரும்)

திருஞானசம்பந்தர் அருளியுள்ள இரண்டாம் திருமுறை

- முனைவர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பிஎச்.டி.

(முன்தொடர்ச்சி)

பரசமய கோளரியும், பாலறாவாயருமான தமிழ்வேதம் விரித்தருளிய கௌண்டியர் குலதீபம் நம் தமிழ்ஞான சம்பந்தர் அருளியுள்ள ஒப்பற்ற அற்புதத் திருப்பதிகமாம் ''திருநீற்றுப் பதிகம்'' இரண்டாம் திருமுறைக்கண் அமைந்து விளங்குவது ஈங்கு நாம் அறிந்து இன்புறவேண்டிய ஒன்றாகும்.

கோளறு திருப்பதிகமாம் ''வேயுறு தோளி பங்கன்'' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளிய தோணிபுரத் தோன்றலார், மாதவத்து திருநாவுக்கரசுப் பெருமானிடம் விடைபெற்று வேதம் வளர்க்கவும், சைவப்பெரு சமயம் விளக்குவதற்கு மாகத் திருவுள்ளம் கொண்டு திருத்தொண்டர்கள் புடைசூழத் தென்மதுரை மாநகர்க்குப் புறப்படுகின்றார்.

''மலர்மாரி பொழிந்திழிய மங்கலவாழ்த்
தினிதிசைப்ப
அலர்வாசப் புனற்குடங்கள் அணிவிளக்குத்
தூபமுடன்
நிலைநீடு தோரணங்கள் நிரைத்தடியார்
எதிர்கொள்ளக்
கலைமாலை மதிச்சடையார் இடம்பலவும்
கைதொழுவார்''

(திருஞானசம்பந்தர் புராணம் 621)

எனச் சேக்கிழார் பெருமான் திருஞானசம்பந்தரை வழியெங்கும் சைவத்திருத் தொண்டர்கள் எதிர் கொண்ட சிறப்பையும், திருஞான சம்பந்தர் சிவத்திருத் தலங்கள் பலவற்றை வழிபட்டவாறு மதுரையை நோக்கி புனிதத் திருப்பயணம் மேற்கொண்ட சிறப்பையும் களிபேருவகையுடன் வருணிக்கின்றார்.

திருஅகத்தியான் பள்ளி, திருக்கோடிக்கா, திரு இடும்பாவனம், திருஉசாத்தானம், திருக்கொடுங் குன்றம் என சிவத்திருத்தலங்கள் பலவற்றை வழி பட்டு ''மதில் மதுரைத் தொன்னகர் வந்து'' சேர்கின்றார் நம் திருஞானசம்பந்தர்.

திருஞானசம்பந்தர் மதுரைக்கு வந்து சேரும் போது சைவசமயம் காத்து நிற்கும் பாண்டிமாதேவியாருக்கும், அமைச்சர் குலச்சிறையாருக்கும் நல்ல நிமித்தங்கள் தோன்றி அவர்கள் பெருமகிழ்ச்சி கொள்கிறார்கள்.

சமணர்கள் தாம் வாழும் பாழிகள் மீதும், பள்ளிகள் மீதும், அசோக மரங்களின் மீதும் ஆந்தைகள் பயங்கரமாக அலறுவதாகவும், ஒன்றோடு ஒன்று எதிர்த்துப் போரிடுவதாகவும் அபசகுனங்கள் கண்டு அளவிலாத் துயரம் அடைகிறார்கள்.

சமணர்களுக்கு உண்டான தீயசகுனங்களைச் சேக்கிழார் பெருமான்

''பள்ளிகள் மேலும் மாடு பயில்அமண் பாழிமேலும்
ஒள்ளிதழ் அசோகின் மேலும் கூகையோடு
ஆந்தை தீய
கொள்ளும்மண் டபங்கள் மேலும் கூகையோடு
ஆந்தை தீய
புள்ளின மான தம்மிற் பூசலிட் டழிவு சாற்றும்''

(திருஞான. 632)

''சீர்மலி அசோகு தன்கீழ் இருந்தநம் தேவர் மேலே
வேரொடு சாய்ந்து வீழக் கண்டனம்,
அதன்பின் னாக
ஏர்கொள்முக் குடையும் தாமும் எழுந்துகை
நாற்றிப் போக
ஊருளோர் ஓடிக் காணக் கண்டனம்''
என்றுரைப்பார்''

(திருஞான. 637)

''கானிடை நட்டம் ஆடும் கண்ணுதல் தொண்டர்
எல்லாம்
மீனவன் மதுரை தன்னில் விரவிடக் கண்டோம்''
என்பார்
கோனவன் தானும் வெய்ய கொழுந்தழல் முழுகக்
கண்டோம்
ஆனவன் எழவும் கண்டோம் அதிசயம்
இதுவாம் என்பார்''

(திருஞான. 639)



''மழவிடை இளங்கன்று ஒன்று வந்துநம் கழகம் தன்னை
உழறிடச்சிதறிட ஓடி ஒருவரும் தடுக்க அஞ்சி
விழவொரு புகலும் இன்றி மேதினி தன்னை விட்டு
நிழலிலா மரங்கள் ஏறி நின்றிடக் கண்டோம்
என்பார்''

(திருஞான. 640)

என வருணித்திருக்கக் காண்கின்றோம்.

சமணனாகிய கூன் பாண்டியனுக்கு வெப்பு நோய் உண்டாவதையும், அதனை மழவிடை இளங் கன்றாகிய திருஞானசம்பந்தர் திருநீற்றுப் பதிகத்தால் குணப்படுத்தி, அனல் புனல் வாதங்களால் சமணரை வென்றுவிட, சமணர் கழுமரம் ஏறுதலையுமே திருஞானசம்பந்தர் மதுரைக்குள் வரக்கண்ட சமணர் கள் தீக்கனாக்களாகக் கண்டு ''இக்கனாத்திறம் மேவிய தீங்கு தன்னை விளைப்பது திடமே'' என வருத்தத்தில் மூழ்கியதாக நம் சேக்கிழார் பெருமான் வருணித்திருப்பது நாம் உணர்ந்து உணர்ந்து மகிழத் தக்க காட்சிகளாகும்.

அரசியாரின் கட்டளைக்கு இணங்க அமைச்சர் குலச்சிறையார் சிரபுரச்செல்வரை வர வேற்று மகிழுகின்றார். அப்போது குலச் சிறையார் வரவேற்ற பான்மையை

''சென்றகாலத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்
எற்றைக்குந் திருவருள் உடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உயர்ந்து
வென்றிகொள் திருநீற்று ஒளியினில்
விளங்கும் மேன்மையும் படைத்தனம் என்பார்''

(திருஞான. 659)

''சமணர்களின்சொல் கேட்டு, சைவசமயத்தைச் சீரழித்த பாண்டிய மன்னன், இனி நற்றமிழ் வேந்த னாக உய்வது திண்ணம் என்பதை உங்கள் வருகை யால் உணர்ந்து மகிழ்ந்தோம்'' என்று அமைச்சர் குலச்சிறையார் ஞானசம்பந்தர் தம் திருவடி விழுந்து பரவும் ஒப்பற்ற திருப்பாடல் - திருஞானசம்பந்தர் புராணத்தில் தெய்வச் சேக்கிழார் பெருமான் இடம் பெறச் செய்துள்ள உயிர்ப்பாடல் இதுவென நாம் போற்றலாம்.

இவ்வாறு அமைச்சர் குலச்சிறையார் நம் திருஞானசம்பந்தர் பெருமானார் திருவடிகள் பரவித் திருஞானசம்பந்தரைத் தாம் ஏற்பாடு செய்த திரு மடத்தில் தங்க வைத்து உபசரித்துத் தம் இருப்பிடம் சென்று விடுகின்றார்.

''சித்தம் இன்புறும் அமைச்சனார் திருமடங் காட்டப்
பத்தர் போற்றிடப் பரிசனத் தொடும்இனி
தமர்ந்தார்''

(திருஞான. 676)

''பரவு காதலிற் பாண்டிமா தேவியார் அருளால்
விரவு நண்பொடு குலச்சிறையார் விருந்து
அளிப்பச்
சிரபுரத்து வந்தருளிய செல்வர் அங்கு இருந்தார்
இரவி மேற்கடல் அணைந்தனன் எல்லிவந்
தணைய''

(திருஞான. 677)

இவ்வாறு திருஞானசம்பந்தர் திருமடத்தில் தங்கிய அந்த இரவு வேளையில் கழுகுபோல் வரும் சமண குண்டர்கள், திருஞானசம்பந்தரைக் கொல்ல தீ வைத்த வஞ்சகச் செயலை என்னென்று உரைப்பது?

''மாதவர் துயிலும்இத் திருமடப் புறம்பு
பழுது செய்வதோ பாவிகாள்''

என்று மனம் பதை பதைக்கின்றார் நம் தெய்வச் சேக்கிழார் பெருமான்.

திருஞானசம்பந்தர் திருமடத்திற்குச் சமணர்கள் தீவைக்க முற்பட்ட செயலைப் பாண்டிய மன்னன் அதை அறிந்தவுடனே தடுத்து இருக்க வேண்டும்; தடுக்காதது அவன் குற்றம்! குற்றமே!

சமண குண்டர்கள் தம்மன்னனை அணுகித் திருமடத்திற்குத் தீவைத்துத் திருஞானசம்பந்தரை விரட்ட எண்ணியிருப்பதாகக் கூறுகிறார்கள்.

''வந்த அந்தணன் தன்னை நாம்வலி செய்து
போக்கும்
சிந்தை யன்றிஅச் சிறுமறை யோன் உறை மடத்தில்
வெந்தழற்பட விஞ்சை மந்திரத் தொழில்
விளைத்தால்
இந்த நன்னகர் இடத்து இரான் ஏகும்
என்றுஇசைத்தார்''

(திருஞான. 688)

சமணர்கள் உரைத்த இத்திட்டத்தை மறுத்துக் கண்டிக்க வேண்டிய மன்னன் அவ்வாறு செய்யாமல் ''ஆவதொன் றிதுவே ஆகில் அதனையே விரைந்து செய்யப்போ'' என்று விரைந்து தீவைக்கக் கூறுகின்றான்.

அருகர் மந்திரம் பயனின்றிப் போய், மந்திரத்தால் மடத்திற்குத் தீவைக்க முடியவில்லை. ஆதி மந்திரம் அஞ்செழுத்து ஆகிய மந்திரமே. ''நமசிவாய'' மந்திரத்தை நாளும், எவ்வேளையும் நவின்று ஓதி வரும் ஞானச் சொல்வரை அருகர் மந்திரம் என்ன செய்துவிட முடியும்?

திருஞானசம்பந்தர்தம் திருமடத்திற்குத் தீ வைக்க அருகர் மந்திரம் பயன்படாமையால் அமண் குண்டர்கள் தளர்ந்து போன தன்மையை நம் சேக்கிழார் பெருமான்

''ஆதி மந்திரம் அஞ்செழுத் தோதுவார் நோக்கும்
மாதிரத்திலும் மற்றை மந்திர விதி வருமோ?
பூதி சாதனர் மடத்தில் தாம் புனைந்த சாதனைகள்
சாதியா வகை கண்டு அமண் குண்டர்கள்
தளர்ந்தார்''

(திருஞான. 698)

எனப் பாடி ''ஆதி மந்திரம் முன் மற்றை மந்திர விதி வருமோ?'' என வினவியுள்ள நயம், நாம் உணர்ந்து மகிழ்தற்குரியது.

மந்திரம் பலன் அளிக்காதபோது, சமண குண்டர்கள் தம் வஞ்சனைத் திட்டத்தைக் கைவிட்டனரா எனில் இல்லை; மந்திரத்தால் கைகூடாத தம் திட்டத்தைப் பொதியழலைக் கொண்டுவந்து திரு மடத்திற்குத் தீவைத்து மகிழ்ச்சி கொண்டார்கள்; இதனையும் சேக்கிழார் பெருமான்

''மந்திரச் செயல் வாய்த்தில; மற்றினிச் செய்யும்
புந்தி ஆவது இங்கிது எனப் பொதிதழல்
கொடுபுக்கு
அந்தண் மாதவர் திருமடப் புறத்தயல் இருள்போல்
வந்து அத்தொழில் புரிந்தனர் வஞ்சனை
மனத்தோர்''

(திருஞான. 700)

எனப் பாடியிருக்கக் காணுகின்றோம்.

நெருப்போடு வந்த சமணர்கள் உள்ளத்தில் ஒளி இல்லை என்பதை உணர்த்தும் வகையில் சேக்கிழார் ''இருள் போல் வந்து'' என்ற தொடராலும், தீவைத்த அவர்தம் தீத்தொழிலை நாவால் கூற அஞ்சி வாக்கின் செல்வர் தெய்வச் சேக்கிழார் ''அத்தொழில் புரிந்தனர்'' எனவும் கூறியுள்ள நயம் இங்குநாம் எண்ணி மகிழ்தற்கு உரிய ஒன்றாகும்.

''தீவைக்கும் செயலை விரைந்து செய்க'' என்று தூண்டிக் குற்றம் பரிந்த மன்னவனையே அத்தீ

''பைய சென்று சேர்க'' என்று பரிவுடன் பணித்தருள் கின்ற திருஞானசம்பந்தர் தம் திருவருள் திறத்தை என்னென்று போற்றுவது!

''வெய்ய தீங்கிது வேந்தன் மேற்று எனும்
விதிமுறையால்
''செய்யனே திரு ஆலவாய்'' எனும் திருப்பதிகம்
சைவர்வாழ் மடத்து அமணர்கள் இட்டதீத்
தழல்போய்ப்
பையவே சென்று பாண்டியற் காகெனப்
பணித்தார்.''

(திருஞான. 704)

விரைந்து தீவைக்கக் கூறிய மன்னவனை மெல்லச் சென்று பற்றுக எனத் திருஞான சம்பந்தர் பணித்தது ஏன் என்பதற்கான விளக்கங்களை நம் தெய்வச் சேக்கிழார் பெருமான் நயமுற

''பாண்டிமா தேவியார் தமது பொற்பில்
பயிலுநெடு மங்கலநாண் பாதுகாத்தும்,
ஆண்டகையார் குலச்சிறையார் அன்பினாலும்
அரசன்பால் அபராதம் உறுத லாலும்
மீண்டுசிவ நெறியடையும் விதியினாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலிவேந்தர்
தீண்டியிடப் பேறுடையன் ஆதலாலும்
தீப்பிணியைப் ''பையவே செல்க என்றார்''

எனப் பாடியுள்ள அருமை விரிப்பின் பெருகும்.

இவ்வாறு மன்னனுக்கு உண்டான வெப்பு நோய் தீர்க்க நம் திருஞானசம்பந்தப் பெருமானால் பாடப்பெற்ற அற்புதத் திருப்பதிகமாம் திருநீற்றுப் பதிகமே காந்தாரப் பண்ணில் பாடப்பட்டு இரண்டாம் திருமுறைக் கண் அமைந்து விளங்குகின்றது.

மந்திரம் ஓதி தீவைக்க முற்பட்ட சமணர்களுக்கு எது மந்திரம் என்பதை உணர்த்தும் வகையிலும், மந்திரம், மற்றவர் நன்மைக்காகவே மொழியப் படவேண்டும் என்ற உண்மையை உணர்த்தும் வகையிலும் இத்திருநீற்றுப் பதிகம் ''மந்திரம்'' எனவே தொடங்கப்பட்டுள்ள அருமையும், மகிமையும் நாம் எண்ணிஎண்ணி மகிழ்வதற்கு உரிய ஒன்றாகும்.

தீரா நோய் எல்லாம் தீர்க்கவல்ல திருநீற்றுப் பதிகத்தை இங்குநாம் ஓதி இன்புறுவோமாக!

திருச் சிற்றம்பலம்

மந்திரம் ஆவது நீறு
வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு
துதிக்கப் படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு
சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய்உமை பங்கன்
திருஆல வாயான் திருநீறே. 1

வேதத்தில் உள்ளது நீறு
வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு
புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு
உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த
திருஆல வாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு
முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு
தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு
பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு
திருஆல வாயான் திருநீறே. 3

காண இனியது நீறு
கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம்
பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு
மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு
திருஆல வாயான் திருநீறே. 4

பூச இனியது நீறு
புண்ணியம் ஆவது நீறு
பேச இனியது நீறு
பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு
அந்தம் அதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு
திருஆல வாயான் திரு நீறே. 5

அருத்தம் அதாவது நீறு
அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு
வானம் அளிப்பது நீறு
பொருத்தம் அதாவது நீறு
புண்ணியர் பூசும்வெண் நீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த
திருஆல வாயான் திருநீறே. 6

எயிலது அட்டது நீறு
இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு
பாக்கியம் ஆவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு
சுத்தம் அதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து
ஆல வாயான் திருநீறே. 7

இராவணன் மேலது நீறு
எண்ணத் தகுவது நீறு
பராவணம் ஆவது நீறு
பாவம் அறுப்பது நீறு
தராவணம் ஆவது நீறு
தத்துவம் ஆவது நீறு
அராவணங் கும்திரு மேனி
ஆல வாயான் திருநீறே. 8

மாலோடு அயன்அறி யாத
வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள்
மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும்
இன்பம் தருவது நீறு
ஆலம் அதுஉண்ட மிடற்றெம்
ஆல வாயான் திரு நீறே. 9

குண்டிகைக் கையர்க ளோடு
சாக்கியர் கூட்டமும் கூடக்
கண்திகைப் பிப்பது நீறு
கருத இனியது நீறு
எண்திசைப் பட்ட பொருளார்
ஏத்தும் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்து ஏத்தும்
ஆல வாயான் திருநீறே. 10

***



ஆற்றல் அடல்விடை ஏறும்
ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும்
பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற
தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும்
வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

இவ்வொப்பற்ற திருநீற்றுப் பதிகத்தை நம் சேக்கிழார்பெருமான்

''மன்னு மந்திரமும் ஆகி
மருந்துமாய்த் தீர்ப்ப தென்று
பன்னிய மறைகள் ஏத்திப்
பகர்திருப் பதிகம்''

என்று கொண்டாடுகின்றார்.

இரண்டாம் திருமுறைக்கண் அமைந்து விளங்கும் இவ்வொப்பற்ற அற்புதத் திருப்பதிகம் ஆற்றிய அற்புதங்களை வரும் இதழில் மேலும் சிறப்புறக் கண்டு இன்புற்றிடுவோமாக!

(தொடரும்)

அன்னதான மகிமை

- திருமதி இந்திரா ஆரா அமுதன், திருவரங்கம்

தானம் என்று சொன்னாலே, உடனே எல்லோருக்கும் ஞாபகத்திற்கு வரும் பெயர் கர்ணன் என்பதுதான்.

''கார்த்திகைக்குப்பின் மழையுமில்லை, கர்ணனுக்குப்பின் கொடையுமில்லை'' என்ற பழமொழி உண்டு. கர்ணன் செய்யாத தானம் அன்னதானம். அதன் மகிமையை அவன் எப்போது உணர்ந்தான்? பார்ப்போம்.

தானத்தில் சிறந்தது அன்னதானம்.

தானம் சுருங்கின் வானம் பொய்க்கும் என்பர். பண்டைக்காலங்களில் கிருஹஸ்தர்கள் ஒருநாள் கூட அதிதி போஜனம் செய்விக்காமல் இருக்க மாட்டார்களாம். கோயில்களிலும் தேசாந்திரிகளுக்காக குறைந்தது இரண்டு பட்டை சாதம் ஒதுக்கி வைப்பது கட்டாயம். அப்படி அன்று யாரும் வரவில்லையென்றால் ஏழைகளுக்கு அந்தப் பிரசாதம் தரப்படும்.

இன்றைக்கும் சில ஆசாரசீலர்கள், தாங்கள் ஏகாதசி உபவாசம் இருந்ததன் விளைவாக மறுநாள் துவாதசி பாரணைக்காக, யாராவது ஒருவருக்காவது அன்னம் படைக்கும் வழக்கத்தை விடாமல் செய்து வருவதும் உண்டு.

தீர்த்த யாத்திரை போய் வந்தபின் சமாராதனை என்ற பெயரில் ஒரு பத்து பேர்களுக்காவது அன்னதானம் செய்வதும் ஒரு சிறந்த நற்பணி.

பல வருடங்களுக்கு முன்பு, வறட்சி தாண்டவமாடியபோது, காஞ்சி மஹாபெரியவாள் அன்னதானம் செய்யும்படி சொன்னார். அவரது சொல்லை வேத வாக்காக ஏற்றுக்கொண்டு உண்மையான சிரத்தையுடன் தினசரி பத்து பேருக்காவது அன்னதானம் செய்ததன் விளைவாக குறைந்த காலத்தில் மழை பெய்து நிவாரணமும் கிடைத்தது உண்மையான நிகழ்ச்சி.

அதன் அடிப்படையில்தான் அவர் பிடி அரிசி திட்டத்தைக் கொண்டுவந்தார். அதன்படி ஒவ்வொரு குடும்பமும் தினசரி ஒரு பிடி அரிசி வீதம் சேர்த்து தம்மிடம் தந்தால், தினமும் மடத்தில் நடக்கும் அன்னதானத்தில் அந்த அரிசியும் சேர்க்கப்பட்டு, கொடுத்தவர்களுக்கு ஒரு நல்ல கைங்கர்யத்தில் பங்கு எடுத்துக்கொண்ட புண்ணியம் கிடைக்கும் என்பதுதான். ஆரம்பத்தில் மிகவும் உற்சாகமாக நடந்து வந்த அந்த திட்டம் காலப்போக்கில் குறைந்தது. பரமாச்சாரியரும் மறைந்து மக்களும் மறந்த நிலை வந்துவிட்டது.

''யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி''

என்று திருமூலரும்

''பசித்தோர் முகம் பார்''

என்று பட்டினத்தாரும் பாடி உள்ளார்கள்.

நம் தமிழக முதலமைச்சர் தாய்க் குலமான தால் கோயில்களுக்கு வரும் யாத்ரீகர்களின் பசியைப் போக்கும் விதத்தில் எல்லா கோயில்களிலும் அன்னதானத் திட்டத்தை அமுல்படுத்தி வருகிறார்கள். இப்புண்ணியத்தில் பங்கு கொள்ள பொது மக்களும் பிரபல நிறுவனங்களும் போட்டி போட்டுக்கொணடு உதவுகிறார்கள். சிறு துளி பெருவெள்ளம் என்பது போல இந்த மாதிரி அன்னதானத் திட்டங்கள் தொடர்ந்து நடைபெறுவதால்தான் மழையையும், காவிரித் தண்ணீரையும் பெற்று வருகிறோம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அத்துணை உயர்ந்த மகத்துவம் கொண்டது!

கர்ணன் வீரசுவர்க்கம் அடைந்து நித்ய சூரிகளுடன் ஆனந்தமாக இருந்த போதிலும் ஒரு குறை அவனை வாட்டியது. காரணம் தெரியாமல் தவித்த போது யதேச்சையாக கிருஷ்ணன் அங்கே வந்தார்.

அவரிடம், ''கண்ணா! இங்குள்ள நித்ய சூரிகளுக்கு பசியே இல்லாதபோது எனக்கு மட்டும் ஏன் பசி எடுக்கிறது? நான் செய்த தானங்களும் தர்மங்களும் எனக்கு உதவவில்லையா என்ன? என்ன காரணம்'' என்று கேட்டான் கர்ணன்.

அதற்கு மாதவன், ''கர்ணா! நீ செய்திருக்கும் தான தர்மங்களை அளவிடவே முடியாதுதான். ஒரு

கும்பாபிடேகப் பலன்

''உமையொரு பாகத்து அமல னாகிய
சிவபெரு மானுக்குச் சிறப்புச் செய்யும்
கும்பா பிடேகப் பலன்கூறுதும் கேண்மோ!
ஆகமங்கள் அருளிய வாறே
கும்பாபிடேகம் குமற்றிய மனிதர்
பாபம் அனைத்தையும் பற்றற விடுவர்
வீடு விரும்பினோர் வீடுபெ றுகின்றார்
நாடு விரும்பினோர் நாடுபெ றுகின்றார்
புதல்வரை விரும்பினோர் புதல்வரைப் பெறுவர்
சிதைவின்மை விரும்பினோர்சி தைவின்மை
பெறுவர்
பொருளை விரும்பினோர் பொருளைப் பெறுவர்
அருளை விரும்பினோர் அருளைப் பெறுவர்
ஞானம் விரும்பினோர் ஞானம் பெறுவர்
மோனம் விரும்பினோர் மோனம் பெறுவர்
அரோகம் விரும்பினோர் அரோகம் பெறுவர்
ஆயுளை விரும்பினோர் ஆயுளைப் பெறுவர்
இம்மையில் மகப்பேறு இருஞ்செல்வம்
உடையராய்த்
தேகாந் தத்தில் சிவசாயுச்யம்
பெறுவர் ஆதலிற் பெரிதாம் முயற்சியால்
தேவ தேவன்சிவபெரு மானுக்கு
அஷ்ட பந்தனம் செய்து அரியபெரிய
கும்பா பிடேகம் குமற்றுக என்பவே''

சமயம் நல்ல மழைக்காலம். அப்போது ஒரு அந்தணர் தான் செய்யும் யாகத்திற்கு காய்ந்த விறகுக் கட்டை களைக் கேட்டபொழுது துரியோதனனால் கூட தர முடியவில்லை. ஆனால் உடனே நீ உன் மாளிகை யில் உள்ள மரச் சட்டங்களை உடைத்து வண்டி யில் ஏற்றி அனுப்பிவிட்டு, புதிதாக நிர்மாணித்துக் கொண்டதை யாரும் மறக்கவே முடியாது. அவ்வாறு சமயோசிதப் புத்தியுடன் நீ நடந்துகொண்டதுபோல் வேறு யார் செய்ய முடியும்? இருந்தும், நீ செய்யாத தானம் ஒன்று உண்டு என்றால், அது அன்னதானம் தான். அதை நீ செய்யாததால்தான் உனக்கு இங்கே பசிக்கிறது'' என்றார்.

''நான் இப்போது என்ன செய்வது?''

''உன் ஆள்காட்டி விரலை வாயில் வைத்துச் சுவைத்துப் பார்''. என்று கண்ணன் சொல்ல, கர்ணன் செய்ய, அவன் பசி பறந்து ஓடியே போய்விட்டது.

''இது என்ன மாயம் கண்ணா?''.

''மாயமும் இல்லை மந்திரமும் இல்லை. யாராவது ஒரு சிறு புண்ணியம் செய்திருந்தால் கூட அவர்களைக் காப்பாற்றும் என்று சொல்வதைப் போல, நீ அன்னதானம் செய்யாமல் இருந்தும் கூட, யாரோ ஒருவர் வந்து அன்ன சத்திரம் எங்கே இருக்கிறது என்று உன்னிடம் கேட்டபொழுது, ''எனக்குத் தெரியாது'' என்று சொல்லாமல் ''அதோ'' என்று அந்த இடத்தைச் சுட்டிக்காட்டினாய் அல்லவா? அந்த புண்ணியத்தினால் அந்த விரலை உன் வாயில் வைத்தவுடன் உன் பசி ஓடிவிட்டது. அதன் மகிமை தான் இப்போது உன்னைக் காப்பாற்றியது'' என்று சொன்னவுடன் கிருஷ்ணன் மறைந்தார்.

கர்ணனும் தனக்கு இன்னொரு பிறவி இருந் தால் அந்தப் பிறவியில் இந்த மகா தானத்தை செய்து உய்வு பெறுவோம் என்று நினைத்துக் கொண்டான்.

''தினமும் 1008 ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அன்ன தானம் செய்தால்தான் நான் உங்களை மணக்க இய லும்'' என்று குமுதவல்லி நிபந்தனை போட்டத னால்தானே, போர்க்குணம் நிறைந்த ஆலிநாடனை பகவானே வந்து ஆட்கொண்டு கலியனாக்கி, பின் 6 பிரபந்தங்களை அருளிச் செய்த திருமங்கை ஆழ் வாரின் மதில் கைங்கர்யத்தில் மகிழ்ந்து அரங்கநாதர் அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கி பத்து அவதாரங்களைக் காட்டித் தந்தார். இன்றைக்கும் ஸ்ரீரங்கத்தில் வடதிருக்காவேரிக்குச் செல்லும் வழி யில் இந்த தசாவதார சன்னிதியில் எழுந்தருளி யிருக்கும் பெருமாள்களை சேவிக்கும் பாக்கியம் நமக்கு கிடைத்திருக்கிறது என்றால் அதற்கு மூல காரணம் இந்த அன்னதானத் திட்டம்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

★★★

பிரார்த்தனை என்பதே பிறருக்காக

- கலைமாமணி மா. லட்சுமணன்

(நீதிக்கதை)

தமிழகத்திலே இறை நற்சிந்தனையில் இரண்டறக்கலந்தவர் கோடி! தெய்வப் புலவர்களில் - இராமலிங்க அடிகளாருக்குப் பிறகு வாழையடி வாழையென வந்த வரிசையில் வேறு யாரும் தோன்றியதாகத் தெரியவில்லை. மகாகவி பாரதி - நாமக்கல் கவிஞர் - புரட்சிக் கவி போன்று - தேசியக் கவிகள் பலர் தோன்றியிருக்கின்றனர் - ஆன்மீகத்தைப் பற்றி கூறவந்தவர்களில் பெரிதும் மாறுபட்ட சிந்தனையாளர் வள்ளலார்! எங்கும் நிறை பரப்பிரம்மத்தைப் பாடிவந்தவர் - மனித நேயத்தை மதித்து எழுத ஆரம்பித்தார் - ''வீடுதோறிரந்தும் பசியறாதயர்ந்த வெற்றரைக் கண்டு உளம் பதைத்தேன். ஈடின் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு இளைத்தவர் தமைக் கண்டு இளைத்தேன்'' என எழுதினார்!

உருவ வழிபாட்டினின்று மாறுபட்டு அருட் பெருஞ்சோதி தனிப் பெருங்கருணை என்ற நிலை எய்துகிறார். சத்திய ஞான சபை அமைத்து - ''அன்பெனும் பிடிக்குள் அகப்படும் மலையே! அன்பெனும் குடில் புகும் அரசே!'' என அன்புதான் தெய்வம் என்று அடித்துக் கூறுகிறார்.

சத்திய தருமச்சாலை அமைத்து அணையாத அடுப்பினை உருவாக்கி - இரவு பகல் முழுவதும் - பசிப்பிணி அகற்றும் தூய பணியினைத் தொடங்கி வைக்கிறார்.

எல்லா மதத்தவர்க்கும் - எல்லா நிறத்தவர்க்கும் எல்லா மொழியினர்க்கும் இயல்பாகப் பொதுவானது வயிற்றுப்பசி - இந்தப் பசியே எல்லாப் பிரச்னைக்கும் மூலகாரணமாகி - புரட்சியாக வெடிக்கிறது என்பதை மனதிற் கொண்டு - இந்த அன்ன தான ஆலயத்தை தோற்றுவித்தார் இராமலிங்கம் - பிறர் நலம் வேண்டி பிரார்த்தித்த பெம்மான்!

நமக்காக வேண்டுவதை விட பிறருக்காக வேண்டுவதையே இறைவன் உடனடியாக ஏற்றுக் கொண்டு அருள் பாலிக்கிறான் என்பதை விளக்குகிறது ஆதிசங்கரரின் சீடரான ஸ்ரீ பத்மபாதர் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம்! அது நீதிக்கதையாக வெளிப்பட்டு பிறருக்கு உதவும் பெருநோக்கினை வளர்க்கிறது.

ஆரண்யத்திலே ஒரு பாறை மீது அமர்ந்து கண்களை மூடி தியானத்தில் இருந்தார்; ஸ்ரீ ஆதி சங்கரர் சீடரான பத்மபாதர். அந்த வழியே வேடன் ஒருவன் வந்தான் - யார் இந்த மனிதர்? கண்களை மூடிக்கொண்டு எதைப் பார்க்கிறார்? என்று எண்ணியவாறு - கீழே உட்கார்ந்து அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். பத்மபாதரிடமிருந்து எவ்வித அசைவுமில்லை! பொறுமையை இழந்த வேடன்... ''அய்யா!... அய்யா எனக் கூப்பிட்டு அவரது தியானத்தைக் கலைத்தான். ஏன் இப்படி தனியா உட்கார்ந்து கண்களை மூடிக் கிட்டிருக்கே? காரணத்தை தெரிஞ்சுக் கணும்னுதான் உன்னை உசுப்பினேன்'' என்றான்!

''நரசிம்மத்தைத் தரிசிக்க வேண்டும்! தன்னை வருத்திக் கொண்டு தவமிருப்போருக்கு அவரது தரிசனம் கிடைக்கும்'' என்றார்.

''நரசிம்மமா? அப்படின்னா?'' என்று கேட்டான் வேடன்.

''சிங்கத் தலையிருக்கும், மனித உடம்பிருக்கும்... அவர்தான் நரசிம்மர்'' என்றார் ஸ்ரீ பத்மபாதர்.

''பாதி மனுஷன் பாதி மிருகமா? அப்படி ஒண்ணு இந்தக் காட்டிலேயே கிடையாது - நீ கதை யளக்கிறே'' என்றான் வேடன்.

''இல்லாமல் நான் கூறுவேனா? சத்தியமாகச் சொல்கிறேன் - அவரை வேண்டித் தவமிருந்தால் நிச்சயம் அவர் காட்சி தருவார். நாம் வேண்டும் வரம் தருவார்!'' என்றார் பத்மபாதர்.

''இந்த காட்டுக்குள்ளே அவர் இருக்காரா?'' . என்று கேட்டான் வேடன்.

''அவர் இல்லாத இடமே இல்லை! நம்மீது எப்போது அவருக்கு இரக்கமும் கருணையும் ஏற்படுகிறதோ அப்போது பிரத்யட்சமாகி காட்சி தருவார்'' என்றார்.

''நீ சொல்றபடி அப்படி ஒரு மிருகம் இருந்தா என் கண்ணுக்கு தப்பாது. கிடைச்சதும் இழுத்தாருவேன்'' என்று கூறிவிட்டு வேடன் புறப்பட்டுப் போனான்.



மீண்டும் தனது கண்களை மூடிக்கொண்டு தவநிலையைத் தொடர்ந்தார் ஸ்ரீ பத்மபாதர். மறு நாள் மாலையில் மலைவாயில் விழுந்துகொண்டிருந் தான் கதிரவன்.

''சாமி! சாமி!... இதானா பாருங்க என்ற வேடனின் குரல் கேட்டுத் தனது கண்களைத் திறந் தார் ஸ்ரீ பத்மபாதர்.''

என்னே அதிசயம் - நரசிம்மரை காட்டுக் கொடிகளால் கட்டி இழுத்து வந்து அங்கே நிறுத்தி யிருந்தான் வேடன்!

சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி எழுந்து ... இறைவா... வேத சாஸ்திரங்கள் படித்து நீதி நெறிமுறை களுடன் வாழ்ந்து நேம நிஷ்டைகள் புரிந்து, காலம் காலமாகத் தவமிருப்போருக்கு காட்சி தராத நீங்கள் இந்த வேடனுக்குக் கட்டுப்பட்டு விட்டீர்களே!'' என்றார்!

பகவான் நாசிம்மர் உடம்பிலுள்ள கட்டுகள் மாயமாய் மறைந்தன. ''பத்மபாதரே! பிரார்த்தனை என்பது பிறருக்காக! தனக்காக வேண்டுவது சுய நலம்! பிறருக்காகப் பாடுபடுவது பொது நலம் - நீ தனக்காக தவமிருந்தாய். இந்த வேடனோ உனக்காக ஓடிவந்தான்... மற்றவருக்காக வேண்டுபவருக்கே முத லிடம் என்றார் நரசிம்மர்....

இது வெறும் கதையல்ல - நடைமுறை சித் தாந்தம் - சோதித்து அறிந்து கொள்ள வேண்டுமானால் மற்றவர்களுக்காக உங்களது சிந்தனையையும் செயலையும் செலுத்துங்கள். நீங்கள் கேட்டது கிடைக் கும். நினைத்தது நடக்கும்!

***

சித்திரையின் சிறப்பு

- திருமதி **மீனாட்சி கோகுலவாசன்**

'சித்திரை' மாத முதல் நாள் தமிழ் வருடப் பிறப்பாகும். இன்று, எந்த நல்ல விதமான செயல்களைச் செய்தாலும், அவ்வருடம் முழுவதும் நிகழும் என்பதால், 'இனிப்பு, கசப்பு, துவர்ப்பு, புளிப்பு' ஆகியவைகள் கலந்ததுதான் வாழ்க்கை என்பதையும் உணரும் வண்ணம், இன்று 'புதுப்புளி, மாங்காய், வெல்லம், இளம் வேப்பங்குருத்துத் தழை' போன்றவைகளைக் கலந்து இறைவனுக்குப் படைத்து விட்டு சுற்றம் சூழ அருந்துவர்.

இன்று அதிகாலை எழுந்து நீராடி, வீட்டை சுத்தம் செய்து, அழகான கோலங்கள் வரைந்து, செம்மண் இட்டு, மாவிலையைக்கட்டி அலங்கரிப்பர். சுவாமிக்கு பூஜை செய்யும்போது புது பஞ்சாங்கத்தை சந்தனம், மஞ்சள், குங்குமம் வைத்து அட்க்ஷதைப் பூக்களால் பூஜை செய்யவேண்டும். அதன்பின் நல்ல நேரம் பார்த்து, பஞ்சாங்கத்தை எடுத்து அவ்வருட பலாபலன்களை விவரம் அறிந்தவர் மூலம் சொல்லக் கேட்கவேண்டும்.

இன்று, போளி வடை, பாயசம், வேப்பம்பூ பச்சடி என்னும் ஐந்து வகை பலகாரங்களுடன் உற்றார், உறவினர்களுடன் கலந்து உண்ணல் வேண்டும்.

இன்று கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து, தானதருமங்கள் செய்தால் ஒன்று பலவாகப் பலனளிக்கும் விசேஷமான நாளாகும்.

சித்திரை மாதம் பிறந்தவுடன் கோயில்களில் சித்திரைத் திருவிழா ஆரம்பித்து வெகு சிறப்பாக நடந்து வரும். சித்திரைத் தேர் மிகச் சிறப்புடன் பிரசித்தி பெற்றது. திருவிழாவின் நடுவில் நடத்தப்படும் விழாவாகும்.

'சித்ரா பௌர்ணமி' என்பது, சித்திரகுப்தருக்குச் செய்யும் விரதமாகும்.

துளிர்விட்ட செடிகளோடும், பூத்துக் குலுங்கும் கொடிகளோடும் திகழ்கின்ற காலமாகிய இந்த சித்திரை மாதம், திருவிழாக்களுக்கும், நல்ல காரியங்களுக்கும் மிகவும் பொருத்தமான மாதமாக பண்டிதர்களாலும், பல மேதைகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்டு உள்ளது.

சித்திரைப் பௌர்ணமியில் நிலாச் சாப்பாடு சாப்பிடுவது என்பது விசேஷமான வைபவமாகும். இன்றைய தினம், 'சித்ரான்னங்கள்' கலந்துகொண்டு, (தேங்காய் வெல்லம் கலந்த பூர்ணம் சாதம், புளி சாதம், தேங்காய் சாதம், எலுமிச்சை சாதம், தயிர் சாதம், போன்றவைகள்) உயரமான இடத்தில் 'நிலா' வெளிச்சத்தில் சுற்றத்தினரும் நண்பர்களும் சூழ மகிழ்ந்து உண்பது அருமை.

மதுரையில் சித்திரைத் திருவிழாவில் மீனாட்சி அம்மனின் பட்டாபிஷேகம் என்பது திருவிழாவில் எட்டாவது நாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. பத்தாவது நாள் மீனாட்சிக்கும் சுந்தரேஸ்வரருக்கும் திருக்கல்யாணம் நடைபெறுகிறது.

ஸ்ரீவில்லிப்புத்தூரிலிருந்து கொண்டுவரப்பட்ட ஆண்டாள், மாலைகளையும், பட்டாடைகளையும் அணிந்து, வலம் வந்து, விடிந்து சித்ரா பௌர்ணமி அன்று அதிகாலையில் வைகையில் எழுந்தருளுகின்றார். மதுரையில் நடக்கும் திருவிழாக்களில் மகுடம் வைப்பதுபோல் அமைகிறது இந்தச் சித்திரைத் திருவிழா!

திருச்சியில் சித்திரை மாதம் தாயுமானவருக்கு சித்திரைத் திருவிழாவில், 'செட்டிப்பெண் மருத்துவம்' என்ற உற்சவம் நடைபெறுகிறது.

சித்திரை மாதம் என்பது மாதங்களில் மிகவும் சிறப்பானது. ஆண்டின் முதல் மாதம் என்பதால் மட்டும் அல்ல, உத்திர நட்சத்திரத்தின் அதிபதி சூரியன்; சித்திரை மாதம் உச்சத்தில் அமரும் சூரியன், பங்குனியில் அந்த உச்சஸ்தானத்தை நோக்கிப் போகிறான். அது அவரின் உச்ச ஸ்தானம். ஆக நவக்கிரகங்களின் அருளைப் பெறவும், தேவர் தலைவனான திருமுருகனின் திருவருளைப் பெறவும் பங்குனி உத்திர விரதம் சிறப்பாகிறது. சித்திரை மாதம் சூரிய பகவான் மேஷ ராசிக்கு வருகிறார், அது அவரின் உச்ச ஸ்தானம் ஆகும்.

உலகில் உள்ளோர்கள் உயிர்வாழ, பயிர்கள் செழிப்பாக வளரவும், அனைத்து உயிர்கள் உயிர் வாழவும் காரணமானவர் சூரிய பகவான் ஆவார்.

கேரளாவில் 'விஷுக்காணல்' என்ற சம்பிரதாயம் உண்டு. வீட்டில் இருக்கும் தங்க நகைகளையும், வெள்ளி நகை பாத்திரங்கள், பணம், கண்ணாடி வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், புஷ்பம் என்று அழகு படுத்தி சித்திரை மாதம் வருடப்பிறப்பன்று தூங்கி எழுந்தவுடன் முதலில் அந்தக் காட்சியைப் பார்ப்பது என்பது சம்பிரதாயமாகும்.

சித்திரை மாதத்தில் விளக்கு பூஜை செய்தால், நிலங்களின் விளைச்சல் பெருகி தானியங்கள் அதிகமாக்கிடைக்கும்.

மலரட்டும் சித்திரை
வளம் பெருகட்டும் வையம்.

***

ஸ்ரீ தட்சிணாமூர்த்தி

- டாக்டர் டி. செல்வராஜ்

சிவபெருமான் ஒருவர்: அவரே சிவம் - பிரமம் - பரம்பொருள். அவரது வடிவங்கள் அறுபத்து நான்கு என்பர். சிலர் இவற்றுள் இருபத்தைந்து வடிவங்களைத் தெரிவு செய்து அவை மிக முக்கியமான வடிவங்கள் என்று வரையறுப்பர். இந்த வடிவங்களில் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி வடிவமும் ஒன்றாகும்.

சிவபெருமானைப்பற்பல திருக்கோலங்களில் தரிசிக்க வேண்டும் என்ற பக்தி ஆசையாலும், ஆர்வத்தாலும் வடிவங்களின் எண்ணிக்கை கூடுதலாகின்றது. ஒவ்வொரு வடிவமும் வெவ்வேறுபட்ட அமைப்புடையது; இறைவனது மேலான திருப்பண்புகளை நுட்பமாக விளக்கும் தனிச்சிறப்புடையது. ஒரே வடிவத்திலும் பல வகைகள் இருக்கின்றன. பக்தர்கள் அவரவர் விரும்பிய வடிவங்களை வழிபட்டால் இறைவன் அந்தந்த வடிவங்களில் எழுந்தருளிப் பேரருள் சுரக்கின்றான்.

இறைவன் உமையம்மையுடன் இணைந்திருக்கின்ற அம்மையப்பர் வடிவம் போக வடிவம், இதனால் உலகிற்கு எண்ணற்ற போகங்கள் விளைகின்றன.

உமையம்மையைப் பிரிந்து சுவாமிகள் தவ நிலையில், தியானத்தில் வீற்றிருக்கின்ற வடிவம் யோக வடிவம். யோகத்துடன் ஞானப்பிரகாசமாக ஒளி வீசுவதால் சுவாமிகள் யோகத்திற்கும், ஞானத்திற்கும் உரியவர் என்பது தெளிவாகிறது.

பெயர்கள்

பழங்காலத்தில் அரசு, ஆல், வேம்பு முதலிய மரங்களில் தெய்வங்கள் உறைகின்றன என்று நம்பினர். மரங்களின் நிழலில் சுதையாலான தெய்வத்திருமேனிகளை நிறுவி வழிபட்டனர். இப்போதும் மரத்தடியில் எழுந்தருளிய தெய்வத்திருமேனிகள் ஓராயிரம் உண்டு. இத்தகைய தெய்வீக மரங்களைத் தலமரங்கள் என்று போற்றி வழிபடுகின்றனர்.

இறைவனுக்கு அரசிலி நாதன் என்று ஒரு பெயர் உள்ளது. அரசிலி = அரச மரத்தைக் கோயிலாகக் கொண்டவன்.

கல்லால் மரத்தின் நிழலில் வீற்றிருக்கின்றவன் ''ஆலமர் செல்வன்''

1. **ஆலமர் செல்வன் :** சங்க இலக்கியங்கள் சுவாமிகளை ''ஆலமர் செல்வன்'' (சிறுபாணாற்றுப்படை 97; கலித் தொகை 81; 83) என்றும், ''ஆலமர் கடவுள்'' (புறநானூறு 198) என்றும், ''ஆல் கெழு கடவுள்'' (திருமுருகாற்றுப்படை 256) என்றும் குறிப்பிடுகின்றன. இவையே, சுவாமிகளைக் குறிக்கின்ற மிகப்பழைய தமிழ்ப் பெயர்களாம்.

2. **தட்சிணாமூர்த்தி :** தட்சிணம் - தெற்கு. தெற்கு நோக்கி அமர்ந்துள்ள தெய்வம் தட்சிணாமூர்த்தி.

3. **தென்முகக் கடவுள் :** இது தட்சிணாமூர்த்தி என்ற வடமொழிப் பெயரின் தமிழ் வடிவம்.

4. **ஞான மூர்த்தி :** தட்சிணம் என்ற சொல்லுக்கு ஞானம் என்று மற்றொரு பொருளும் இருக்கிறது. எனவே, சுவாமிக்ள் ஞானமூர்த்தி; ஞான வடிவானவர். ஞானத்தை வாரி வாரி வழங்குகின்ற வள்ளல்.

5. **யோகீசுவரன் :** யோக + ஈசுவரன் எப்போதும் யோக நிலையில் இருக்கின்ற இறைவன்.

மேற்கண்ட பெயர்களால், சுவாமிகள் கல்லால மர நிழலில், தெற்கு நோக்கி, யோக நிலையில் எழுந்தருளிய ஞானத்தின் தெய்வம் என்பன தெளிவாகத் தெரிகின்றன.

இருப்பிடம்

சிவன் கோயில்கள் அனைத்திலும் கருவறையின் தெற்கு வெளிப்புறச் சுவரில் ஒரு கோட்டத்தில் சுவாமிகள் வீற்றிருக்கின்றார். எனவே, இவர் ''கோட்டத் தெய்வம்'' ஆவார்.

பிரகாரத்தில் வலம் வருகின்ற பக்தர்கள் ஐந்து கோட்டத் தெய்வங்களான 1. விநாயகரையும் 2. தட்சிணாமூர்த்தியையும் 3. மகா விஷ்ணுவையும் அல்லது லிங்கோற்பவரையும் 4. பிரமனையும் 5. துர்க்கையையும் முறையே வழிபடுகின்றனர்.



தட்சிணாமூர்த்தி - மகாவிஷ்ணு - பிரமன் என்ற மும்மூர்த்திகளில் சுவாமிகளே முதல் வழிபாட்டிற் குரியவர் ஆவர்.

கோட்டத் தெய்வமான தட்சிணாமூர்த்திக்கு ஆலங்குடி, திருவொற்றியூர், திருவாரூர் முதலிய மிகச்சில திருத்தலங்களில் தனிச் சன்னிதிகளும் உண்டு. தனிக்கோயில் இல்லை.

குரு

சீடர்களிடம் காணப்படுகின்ற குற்றம் குறை களை அறவே அகற்றுகின்றவர் குரு.

தட்சிணாமூர்த்தி அனைவருக்கும் முதன்மை யான முதல் குரு; ஆதி குரு. குரு பரம்பரையின் தொடக்கம் இவரே.

இவர் ஞானத்தைப் புலப்படுத்தும் ஞான குரு. உலகம் அனைத்திற்கும் ஞால குரு.

பக்குவப்பட்ட பக்தர்களை ஆட்கொள்ள வேண்டிக்கனிந்த செம்மையான நேரத்தில் வந்தருளு கின்ற பிரம குரு.

சுவாமிகள் திருவாய் மலர்ந்து ஒரு வாசகத்தை யும் உபதேசிக்கவில்லை. இவ்வாறு அவர் உபதேசிக்க வேண்டிய தேவையும் இல்லை. அவரைப்பக்தி யுடன் கண்டதும் பிறப்பது ஞானம். ஞானத்தைப் பற்றிக் கொண்டதும் பிறப்பது முத்தி.

தட்சிணாமூர்த்தியின் வடிவமும், அதிலுள்ள பல பொருள்களும், ஒருவர் மேலான அனுபூதி நிலையை அடைவதற்குரிய அடிப்படை நெறிமுறை களை நுட்பமாகவும், தெளிவாகவும் உணர்த்து கின்றன. திருவாய் உபதேசிக்க வேண்டிய தத்துவங் களைத் திருமேனியே உபதேசிப்பதால், அவர் திருவாயால் உபதேசிக்காத மௌன குரு.

குருவருள் இன்றித்திருவருள் இல்லை.

சீடர்கள்

பிரம புத்திரர்களான சனகர், சனந்தனர், சனா தனர், சனத் குமாரர் ஆகியோர் நால்வரும் மௌன குருவின் சீடர்கள் ஆவர். இவரது திருவடியருகில் அந்நால்வரது வடிவங்களைக் காணலாம்.

சுவாமிகளின் தோற்றப் பொலிவுகளும் தத்துவ உட்பொருள்களும்

பளிங்கு நிறமுடைய தட்சிணாமூர்த்தி திரு மேனி பற்பல தத்துவக் கருத்துகளைத் தெரிவிக் கிறது. அவற்றைத் தொகுத்துக் காணலாம்.

பின்னணி

1. கல்லால மரம் : ''ஆல் போல் தளைழத்து அறுகு போல் வேரோடி'' என்பது நாடோடிப் பாடல் ஒன்றின் அடி. ஆலமரம் தழைத்தும், படர்ந்தும் நூற்றாண்டுகளைக் கடந்தும் வளரும் இயல்புடையது.

ஞானம் என்றென்றும் தழைத்துப் பெருக வேண்டும் என்பதைக் கல்லால் மரம் உணர்த்துகிறது.

2. திருமுக மண்டலம் : சுவாமிகள் தெற்கு நோக்கி இருப்பதால், அவரைப் பக்தர்கள் வடக்கு நோக்கி வழிபட வேண்டும்.

சிவபெருமான் வீற்றிருக்கின்ற கயிலாய மலை வடக்கில் இருப்பதால் இது புனிதமான திசையாகும்.

பக்தர்கள் வடக்கே நோக்கியபடி சுவாமிகளை வழிபடுகின்றபோது, முதலில் இவரையும், அடுத்து, கருவறையிலுள்ள சிவலிங்கத்தையும், தொடர்ந்து, கயிலாய நாதரையும் ஒருங்கே வழிபடுகின்ற நுட்பம் கவனிக்கத்தக்கது. மூவருக்கும் ஒரே வழிபாடு.

3. சடைமுடி : சடைமுடி, சடாபாரம், சடா பந்தம், சடா மண்டலம், சடா மகுடம் ஆகிய நான்கில் ஓரமைப்புடையது. இது பற்றற்ற தவ நிலை, தியான முதிர்ச்சியின் அறிகுறி.

4. கங்கை முதலியன : சடைமுடியில் (1) கங்கை (2) கொன்றை மலர் (3) பிறை நிலா (4) கபாலம் என்பன இருக்கின்றன.

1. கங்கை : சுவாமிகள் யோகநிலையில் ஆதிபராசக்தியைப் பிரிந்திருக்கின்றார். இப்போது உலக இயக்கத்திற்கு ஒரு சக்தியாகப் பயன்படுகின்றவள் கங்கை.

2. கொன்றை மலர் : மங்கல நிறமுடையது; ஓங்கார வடிவுடையது. அழகுடையது.

3. பிறை நிலா : குற்றமற்ற ஞானத்தின் கொழுந்து; ஞானத்தின் படிப்படியான வளர்ச்சி; தம்மிடம் அடைக்கலமாக வந்து திருவடிகளில் சரணடைந்தவர்களைத் திருமுடிமேல் ஏந்திக் காக்கின்ற நற்பண்பு.

4. கபாலம் : உலகம் நிலையற்றது என்பதை எடுத்துக்காட்டுகிறது. அருவெறுப்பு தருவது. அழகும் அருவெறுப்பும் அருகருகே உள்ளன.

5. நெற்றித்திருநீறு : உலகம் ஒடுங்கும் சாம்பலாகும் இயல்புடையது; சைவ சமயத்தின் புறச் சின்னம்.

6. நெற்றிக்கண் : ஞானக்கண்; தீய குற்றங்கள் அனைத்தையும் சுட்டெரிப்பது.

7. திருக்கண்கள் : தியான நிலையில் மூக்கு நுனியை உற்று நோக்குபவை.

8. திருமார்பு - உருத்திராக்கம் : உருத்திராக்க மாலைகளைத் திருமார்பில் புனைந்தவர்; வலக்கையில் ஏந்தியவர்.

உருத்திராக்கம் சைவ சமயத்தின் மற்றொரு புறச்சின்னம். சுவாமிகள் திருநீற்றையும், உருத்திராக்க மாலையையும் தாமே அணிந்து சைவ அடியார்களுக்கு ஒரு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்கின்றார்.

'நமச்சிவாய' என்பது சைவ சமயத்தின் அகச் சின்னம். உருத்திராக்க மணிகளை உருட்டியவாறே ஐந்தெழுத்து மந்திரத்தை இடையறாமல் ஓத வேண்டும்.

உருத்திராக்க மணிகள் சித்தாந்த தத்துவங்களைக் குறிக்கின்றன; மற்றும், முதிர்ந்த ஞானத்தின் அடையாளமும் அவையே.

9. திருமேனி : இடைக்குமேல் சிறு வளைவும் இல்லாமல் நேராக நிமிர்ந்த திருமேனி. தியானத் திற்குரிய மிடுக்கும், ஒரு குருவுக்குரிய பெருமிதமும் கொண்டது. கம்பீரமானது.

10. கைகள் நான்கு : (அ) பல திருமேனிகளில் அவர் வலக்கைகளில் ஏந்தியவை :-

(1) உடுக்கை : உலகின் தோற்றத்திற்குக் காரணமானவர். பரம்பொருள்.

(2) சின் முத்திரை : சைவ சித்தாந்தத்தின் அடிப்படைகளான பதி, பசு, பாசம் என்பன மூன்றும் நிலைபெற்றுள்ளன என்பதை நிலைநாட்டும் ஞான முத்திரை. இது பசு (உயிர்) பதியோடு (இறைவனோடு) ஒன்றி இணைகின்ற முறையையும் சுட்டுகிறது.

(3) உருத்திராக்கம் : தியானம், ஞானத்தின் குறியீடு.

(4) சுவடி : சிவஞான போதம்; வேதம்; இலக்கியம். கல்வி.

(5) அபய முத்திரை : அஞ்சிய உயிர்களுக்கு அபயம் அருளுகின்றவர்.

இடக்கைகள்

(அ) பல திருமேனிகளில் அவர் இடக்கைகளில் ஏந்தியவை :-

(1) நெருப்பு : உலக ஒடுக்கத்திற்குக் காரணமானவர். பரம்பொருள்.

(2) பாம்பு - குண்டலினி சக்தி. யோக நெறி.

(3) அமுத கலசம் - பேரருள் அமுதத்தைச் சுரப்பவர்.

(4) வரத முத்திரை - உலகத்தைக் காப்பவர்.

(5) நீலோற்பல மலர் - காமனை வதைத்து அவனது நீலோற்பல மலரைப் பறித்துத் தாமே வைத்துக் கொண்டார். காமத்தைக் கடந்தவர் என்பது குறிப்பு.

(6) தண்டம் : குற்றம் குறைகளை உடனே தண்டிப்பவர்.

11. அமர்ந்த நிலை : வலக்காலைத் தொங்க விட்டு முயலகன்மேல் ஊன்றியும், இடக்காலை மடித்து வலத் தொடையில் வைத்தும் அமர்ந்த இந் நிலையே வீராசனம்.

12. புலித்தோல் ஆசனம் : தீய ஆற்றல்களை முழுவதும் அடக்குதல். புலி = வன்மையானது. தவசி களுக்குத் தகுந்த ஆசனம்.

13. தாமரை மலர் ஆசனம் : தாமரை ஞானம், செல்வத்தின் முத்திரை. சுவாமிகள் பக்தர்களின் மனத் தாமரையில் நீங்காமல் அமர்ந்து, பக்தித்தேனைப் பருகு கின்றவர். மலர் = மென்மையானது. வன்மையும், மென்மையும் இறைவனுக்கு நிகர்.

14. முயலகன் : சுவாமிகள் ஆணவம், அஞ் ஞானத்தை மிதித்து நசுக்கி வதைப்பவர். ஞானம் நிறைய அஞ்ஞானம் வேரோடு களையப்பட வேண்டும்.

15. உயிரினங்கள் : பின்னணியில் சுவாமி யைச் சுற்றியுள்ள உயிரினங்கள் அவரது பேரருள் பாதுகாப்பில் உள்ளன.

16. விடையூர்தி : இது சுவாமிகள் செலுத்தும் தரும விடை. அவரது திருக்குறிப்பின்படி இயங்கு வது.

இவ்வாறு தட்சிணாமூர்த்தி திருமேனி அரிய பல தத்துவங்களைத் தெரிவிக்கிறது.

தட்சிணாமூர்த்தியும், நடராசரும்

அமைதியாக அமர்ந்த கோலமுடையவர் தட்சிணாமூர்த்தி. ஆனந்தமாக ஆடும் கோலமுடையவர் நடராசர். இருவரும் தென்திசை நோக்கி எழுந்தருளும் தெய்வங்கள்; பிறை சூடிகள்; நான்கு திருக்கைகளை உடையவர்கள்; வலக்கையில் உடுக்கையும், இடக் கையில் நெருப்பையும் ஏந்தியவர்கள்; வலக்காலால் முயலகனை மிதிப்பவர்கள். இவ்வாறு சில அம்சங்கள் இருவருக்கும் பொதுவாக இருப்பது ஒரு தனிச் சிறப் பாம்.

தட்சிணாமூர்த்தியும், சரஸ்வதியும்

வீரபத்திரரும், துர்க்கையும் வீரத்திற்கும், குபேர னும், இலக்குமியும் செல்வத்திற்கும், சுவாமிகளும், சரஸ்வதியும் ஞானத்திற்கும் உரிய ஆண், பெண் இரட்டைத் தெய்வங்கள் ஆவர்.

தட்சிணாமூர்த்தியும், சரஸ்வதியும் ஞான வடிவங்களாம். இருவரது கைகளிலும் உருத்திராக்க மாலையும், சுவடியும், வீணையும் இருக்கின்றன. ஞானம், கலை, கல்வியின் சின்னங்கள் இவ்வாறு இருவருக்கும் பொதுவாக இருப்பது பொருத்தமே.

திருத்தலங்களில் தட்சிணாமூர்த்தி

மாமல்லபுரத்தில் தட்சிணாமூர்த்தியின் வடிவங்கள்

மாமல்லபுரத்தில் தட்சிணாமூர்த்தியின் மூன்று வடிவங்கள் தர்மராசா ரதத்திலும், கடற் கரைக் கோயிலி லும், உழக்கெண்ணெய் ஈசுவரர் கோயிலிலும் இருக் கின்றன. இம்மூன்று வடிவங்கள் கி.பி. 7ஆம் நூற் றாண்டைச் சார்ந்தவை; மிக்க பழமை வாய்ந்தவை.

சுவாமிகளின் வடிவ வகைகள்

தட்சிணாமூர்த்தி வடிவ வகைகள் நான்கு. அவை வருமாறு :-

(1) வியக்கியான தட்சிணாமூர்த்தி

வேதத்தின் நுண்பொருள்களை உணர முடியா மல் சீடர்கள் நால்வரும் திணறினர். அவர்களுக்கு அந்த நுண்பொருள்களை மௌன நிலையில் தெளி விக்கும் கருத்துடன் வீற்றிருக்கின்றவர் வியாக்கியான தட்சிணாமூர்த்தி. இந்த வடிவம் ஆலங்குடி முதலான பல திருத்தலங்களில் காணப்படுகிறது.

(2) யோக தட்சிணாமூர்த்தி

இவர் யோக நெறிப்படி ஞானம் பெறக்கூடிய முறைகளை உணர்த்துகின்றவர். இவரது கைகளில் இருப்பன :-

(அ) வலக்கைகள்

1. யோக முத்திரை (2) உருத்திராக்க மாலை

(ஆ) இடக்கைகள்

1. மடிமீது உள்ளது (2) பத்மம்

அரக்கோணத்திற்கருகில் இலம்பையங்கோட்டூரில் இவரது வடிவம் உள்ளது.

(3) ஞான (மேதா) தட்சிணாமூர்த்தி

இவருக்கும், வியாக்கியான தட்சிணாமூர்த்திக்குமிடையில் அதிகமான வேறுபாடுகள் இல்லை. இவர் ஞான நெறிப்படி ஞானத்தை அருளுகின்றார். இவரது கைகளில் இருப்பன வருமாறு :-

(அ) வலக்கைகள்

1. உருத்திராக்க மாலை (2) சின் முத்திரை

(ஆ) இடக்கைகள்

1. அபய முத்திரை அல்லது தண்டம். (2) நீலோற்பலம்

இவரது வடிவங்கள் ஆலூர், திருவொற்றியூர், சுசீந்திரம் முதலிய திருத்தலங்களில் இருக்கின்றன.

(4) வீணை தட்சிணாமூர்த்தி

இவர் இரு கைகளில் வீணையை ஏந்திக் காட்சி தருகின்றார்.

சுவாமிகள் ஏந்தியிருக்கின்ற சுவடி இலக்கியத் தமிழ்; வீணை - இசைத்தமிழ்; நடராசரின் நடனம் - நாடகத் தமிழ். எனவே, இறைவன் முத்தமிழ் வித்தகர் ஆவர்.

இவரது திருமேனியைத் திருமறைக்காடு, ஓரத்தநாடு, காஞ்சி கயிலாசநாதர் கோயில், நாகலாபுரம் (ஆந்திரம்) முதலிய தலங்களில் காணலாம்.

வடிவ வேறுபாடுகள்

இயல்பான வடிவங்களுக்கு மாறாக வெவ்வேறு வடிவங்களில் தோன்றுகின்ற தட்சிணாமூர்த்தியின் திருவடிவங்கள் இருக்கின்ற சில திருத்தலங்கள் வருமாறு :-

1. தக்கோலம் : தட்சிணாமூர்த்தி ஒரு காலைத் தொங்க வைத்தும், ஒரு காலை ஆசனத்தின் மீது வைத்தும், தலை சாய்த்து அமர்ந்திருக்கிறார்

2. கழுகுமலை : வீணைக்குப் பதிலாக மிருதங்கத்தை ஏந்துகிறார்.

3. திருவையாறு : கபாலமும், சூலமும் ஏந்தியவர். முயலகனுக்குப்பதில் ஆமை உள்ளது. சுவாமிகள் ஐம்புலன்களை வென்ற அடியார்களுக்கு அருள் புரிகின்றார் என்பது கருத்து.

4. வாணியம்பாடி : சுவாமிகள் சக்தியுடன் விளங்குகின்றார். இவர் சக்தி தட்சிணாமூர்த்தி.

5. திரு வீழிமிழலை : முயலகன் இல்லை

6. களக்காடு : இரண்டு திருவடிகளையும் முயலகன் மீது வைத்திருக்கின்றார்.

திருத்தலங்கள்

சுவாமிகள் வீற்றிருக்கின்ற திருத்தலங்களில் மிகவும் முக்கியமானவை.

1. திருவெண்காடு 2. ஆலங்குடி 3. திருமாந்துறை 4. குடந்தை 5. திரு வீழிமிழலை 6. திருவாரூர் 7. மாங்குடி 8. கஞ்சனூர் 9. கருவிலி 10. திருவிடைமருதூர் 11. மதுரை. 12. கொள்ளம்புதூர் 13. திருப்புறம்பயம் 14. பெருந்துறை முதலியன.

ஆலங்குடி

கும்பகோணத்திலிருந்து 17 கி.மீ. தூரத்திலும், நீடா மங்கலத்திலிருந்து 6 கி.மீ. தூரத்திலும் ஆலங்குடி உள்ளது. இதற்குத் திரு இரும்பூளை என்ற மற்றொரு பெயரும் உள்ளது. இது தேவாரப்பாடல் பெற்ற திருத்தலம்.

ஆலங்குடியில் தட்சிணாமூர்த்தியே உற்சவர். ஆறு காலப்பூசைகளும், சிறப்பு வழிபாடுகளும், திருவிழாக்களும் இவருக்கே உரியன. தேரில் பவனியுலா வருகின்றவரும் இவரே.

ஆலங்குடி குரு தோஷப் பரிகாரத்தலம். குரு பெயர்ச்சியின்போது மிகச்சிறப்பான வழிபாடுகள் நிகழ்கின்றன. பெருந்திரளான மக்கள் கூடுகின்றனர்.

வழிபாடு

கோயில்களில், வியாழக்கிழமை தோறும், ஞான ஒளி ஏற்றுகின்ற தட்சிணாமூர்த்தியின் திருமுன் நெய் விளக்குகளை ஏற்றி வழிபட வேண்டும்.

வீடுகளில், தெய்வங்களின் போக வடிவங்களை எழுந்தருளச் செய்து வழிபடுவது உத்தமம். தட்சிணாமூர்த்தி யோக வடிவினர். எனவே, இவர் வடிவத்தை வீடுகளில் வைத்து வழிபடும் வழக்கம் பெரும்பாலும் இல்லை. நெய்விளக்கேற்றித் தியானித்து இவரை வழிபடலாம். ஞானம், ஆரோக்கியம், அமைதி, ஆனந்தம் முதலிய பலப்பல பலன்களை நிச்சயம் பெறலாம்.

***

மீனாட்சி அமுதம்

- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

அமுதம், அமுதம், மீனாட்சி
அன்னையின் நாமம் அமுதம்

சுந்தரம், மீனாட்சி சொந்தம்,
துதிக்கும் மனமே, இல்லம்;
நந்தியின் சக்தியாய் ஓன்றும்
நாதனின் நடனத்தின் சந்தம். (1)

அன்னையே என்றதும், அமுதம்
அடியார் மனத்தில் சுரக்கும்.
அன்னையே, அன்னையே என்றதும்,
அன்னையின் அன்பும் சொரியும். (2)

கொஞ்சிடும் கண்களால், குறைகளும்,
கும்பிட அடியோடு தொலையும்,
அஞ்சிடும் மாந்தரின் தடைகளும்,
அன்னையின் அருளால் அழிந்திடும் (3)

அழகின் வடிவம் அன்னை,
ஐயனில் பாதியும் அன்னை,
இளமையின் நிரந்தரம் அன்னை,
இயற்கையின் உறைவிடம் அன்னை. (4)

சக்தியின் வடிவம் அன்னை,
தரணியும், சகலமும் அன்னை.
பக்தியின் அடிமை அன்னை,
பக்தியால் காணலாம் அன்னை. (5)

அன்னையே நீவர வேண்டும்
அவனியே சொர்க்கமாய் வேண்டும்
அன்பும் மலர்ந்திட வேண்டும்.
அகம்புறம் இனித்திட வேண்டும். (6)

சொல்செயல் ஒன்றிட வேண்டும்
சொன்னசொல் காத்திட வேண்டும்
இல்லறம் வென்றிட வேண்டும்
இல்லாமை ஒழிந்திட வேண்டும். (7)

கருமம் களைந்திட வேண்டும்
காருண்யம் மலர்ந்திட வேண்டும்
தருமம் தழைத்திட வேண்டும்
தடைகள் அழிந்திட வேண்டும். (8)

துதிக்கும் மனமே வேண்டும்
தொலையாத சுபிட்சம் வேண்டும்
மதிக்கும் செயலும் வேண்டும்.
மன்னிக்கும் மனமும் வேண்டும். (9)

வேண்டுவன எல்லாம் வேண்டும்
வேண்டியதை நீதர வேண்டும்
மாண்டுமுன் அடிசேர வேண்டும்
மதுரை மீனாட்சி, மீனாட்சியே. (10)

அமுதம், அமுதம், மீனாட்சி
அன்னையின் நாமம் அமுதம்.

(முற்றும்)

***

எமவாதனை நீங்க வழிபடவேண்டிய திருத்தலம் திருவாஞ்சியம்

– திருமதி மீனாட்சி கோகுலவாசன்

ஒவ்வொருவரும் தம் வாழ்நாளில் ஒரு முறையாவது காசி க்ஷேத்திரத்திற்குச் சென்று, கங்கையில் நீராடி அங்கு கோயில் கொண்டுள்ள 'காசி விசுவநாதர், விசாலாட்சி, பைரவர்' இவர்களை தரிசித்தால் அவரவர் செய்த பாவங்கள் நீங்கி, நற்கதி அடைவர் என்று புராணங்கள் கூறுகின்றன.

காசி நகருக்கு நிகரான ஆறு க்ஷேத்திரங்கள் ஆவன: திருவெண்காடு, திருவையாறு, திருமயிலாடுதுறை, திருவிடைமருதூர், திருச்சாய்க்காடு, திருவாஞ்சியம்; இந்த ஆறு க்ஷேத்திரங்களும் காசி நிகர் ஆகுமென பல புராணங்கள் பேசுகின்றன.

'காசிக்கு வீசம் கூட' என்ற பழமொழியுடன் உள்ள தலம், தமிழ் நாட்டிலேயே உள்ளது. காவிரிக் கரையிலுள்ள ஆறு தலங்கள் காசிக்கு ஒப்பானவை. அவைகளுள் காசிக்கு மேற்பட்டது. 'ஸ்ரீவாஞ்சியம்' என்னும் தலம் என்பதாகப் பரமேஸ்வரனே பார்வதிக்குக் கூறியதாக பிரம்மாண்ட புராணம் தெரிவிக்கிறது.

காவிரிக்கரையில் உள்ள சிவாலயங்களில் வட கரையில் அறுபத்து மூன்று (63), தென்கரையில் நூற்றி இருபத்தேழும் (127) ஆக நூற்றித் தொண்ணூறும் அமைந்திருக்கிறது. தென்கரையில் எழுபதாவது தலமாக அமைந்திருப்பது, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 'ஸ்ரீவாஞ்சியம்' என்னும் சிவாலயமாகும்.

ஆதி கல்பத்தில் சிவபெருமானது இடது பக்கத்தில் தோன்றிய மகாவிஷ்ணு, உலகைக் காப்பாற்றும் ஆற்றல் பெற வேண்டி, இத்தலத்தை அடைந்து சிவபெருமானைக் குறித்துக் கடுமையான தவம் செய்து வந்தார். பல காலம் தவம் செய்தும் சிவபெருமான் காட்சியளிக்கவில்லை; வருந்திய மகாவிஷ்ணு, தனது தலையை அறுத்து அக்னியில் எறிய விரும்பிய பொழுது, சிவபெருமான் சுயம்பூதமான லிங்கவடிவில் தோன்ற, ''எனக்கு, இப்புவியோரைக் காக்கும் திறமை வேண்டும்'' என்று வேண்டினார் மகாவிஷ்ணு.

''முன்பு பிரளய காலத்தில் வேதங்களெல்லாம் என்னை வந்து அடைந்தன. அவ்வேதங்களிலிருந்து உலகம் காக்கும் திறனறியலாம். ஆகையால் காக்கும் விஷயங்களைக் கூறும் வேதத்தை என்னிடமிருந்து பெற்றுக் கொள்வாய்'', என்று சிவபெருமான் உபதேசம் செய்தார். அவ்விதமே மகாவிஷ்ணு, சிவபெருமானிடமிருந்து வேதத்தின் பொருளையும், காக்கும் தொழிலையும் கற்றறிந்து, ''இக்கலியுகத்தில் பிராணிகளுக்கெல்லாம் நன்மை விளைவிக்க வேண்டி, இங்கேயே 'லிங்க' வடிவினராய் இருக்க வேண்டும்'', என்றும் வேண்டிக்கொண்டார். இவர் வேண்டுகோளுக்கு இணங்க சுயம்பு லிங்கவடிவினராய் தோன்றியவர்தான் மூலவர், 'ஸ்ரீவாஞ்சிநாதர்' ஆவார்.

பெரிய லிங்க வடிவிலுள்ள ஸ்ரீவாஞ்சிநாதர் கிருதயுகத்தில் இரத்தினமயமாகவும், திரேதாயுகத்தில் பொன்மயமாகவும், துவாபர யுகத்தில் வெள்ளிமயமாகவும், இந்தக்கலியுகத்தில் சிவரூபியாகவும் விளங்குவதாகச் சொல்லப்படுகிறது.

நான்முகன், திருமால் இருவரும் முறையே படைத்தல், காத்தல் ஆகிய தொழில்களைப் புரியும் திறமையை இங்கு பெற்றனர்.

கௌதமர், ஜமதக்னி, காசியபர், அத்ரி, விசுவாமித்திரர், பரத்வாஜர், வசிஷ்டர், பராசரர், வால்மீகி, மகுடவர்த்தன அரசன், கிருஷ்ணன், லட்சுமி, இந்திரன், விகுக்ஷி, அவன் மனைவி சாருமதி முதலியோர் இத்தலத்திலுள்ள வாஞ்சேசரை வழிபட்டு தாங்கள் விரும்பியவற்றை அடையப்பெற்று மகிழ்ந்தனர்.

இந்த க்ஷேத்திர மகிமையைப் பற்றி, கந்தப் புராணம், பிரம்மாண்ட புராணம், சாம்போபுராணம், ஆக்நேய புராணம் முதலியவைகளில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஸ்ரீதேவியான லக்ஷ்மி, ஸ்ரீமந்நாராயணனைப் பிரிந்து, வருந்தி வடமேற்கு மூலையில் தவம்

செய்வதாயும், அதே போன்றே நாராயணனும் மேற்கிலுள்ள நாராயணாஸ்ரமம் (நாராயண மங்கலம்) என்ற தலத்தில் தவமிருப்பதாயும் இவ்விருவர் தங்களுக்கு மனம் இறங்கி பரமேஸ்வரன் அருள் செய்து இருவரையும் சேர்த்து வைத்ததால் (ஸ்ரீதேவியிடம் கொண்ட வாஞ்சனையினால் (கருணையினால்) ஸ்ரீமந் நாராயணனுடன் சேர்த்து வைத்ததால், ஈஸ்வரனுக்கு, 'ஸ்ரீ வாஞ்சிநாதர்' என்ற பெயர் ஏற்பட்டது.

இத்தலத்திற்கு மற்றொரு சிறப்பும் உண்டு; தமிழ் நாட்டில் எல்லா தேவதைகளுக்கும் கோயில்கள் இருப்பதை ஆங்காங்கு நாம் காண்கிறோம். ஆனால் காலதேவனாகிய, 'எமதர்மராஜனுக்கு' ஒரு கோயில் இருப்பது பலருக்குத் தெரியாது. அவர் கோயில்கொண்டிருக்கும் ஒரே தலம்தான் ஸ்ரீ வாஞ்சியம்.

மூவர் தேவாரம்பெற்றது, மாணிக்கவாசகர் நாவாரப்பாடப் பெற்றது, அருணகிரி நாதரது திருப்புகழும் இணைந்தது, வடலூர் ராமலிங்க அடிகளாராலும் பாடப்பெற்ற தலம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பெரிய கோயில்களுள் இதுவும் ஒன்று. 558 அடி நீளமும், 320 அடி அகலமும் கொண்ட இக்கோயில், மூன்று கோபுரங்கள், மூன்று விமானங்கள், மூன்று பிரகாரங்களுடன் வானளாவி நிற்கிறது.

ஐந்து நிலை, ராஜகோபுரத்தைத் தாண்டியதும் நாம் முதலில் காணுவது எமதர்மராஜன்தான்! இடது புறம் தனி சந்நிதியில் தெற்கு நோக்கி தனது எருமை வாகனம் இன்றி, உட்கார்ந்த கோலத்தில், பக்கத்தில் தனது கணக்கர் சித்திரகுப்தரோடு காட்சியளிக்கிறார். முதலில் இவரை வணங்கிய பிறகே, மற்றவர்களை தரிசிக்கவேண்டும் என்பது இங்குள்ள நியதி. சித்திர குப்தருக்கு காஞ்சிபுரத்தில் தனிக் கோயில் உள்ளது. ஆனால் எமதர்மராஜாவுக்கு, தனி சந்நிதி அமைந்திருக்கும் தலம் தமிழ்நாட்டில் இது ஒன்றுதான்.

பிற உயிர்களைக் கவர்வதால் தனக்கு உண்டாகும் பாவங்களைப் போக்கிக்கொள்ள விரும்பிய எமதர்மராஜா, பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று தனக்கு ஓர் இடம் கேட்க, யாரும் அவனுக்கு இடம் கொடுக்க முன்வரவில்லை. கடைசியில் திருவாரூரில் கோயில் கொண்டிருக்கும் தியாகேசனைக் கேட்டான். அவர், அவனுக்குத் தகுந்த இடம் ஸ்ரீவாஞ்சியம் க்ஷேத்திரம்தான் என்றும் அங்கு சென்று தங்கியிருக்கச் சொல்லவே, எமதர்மராஜன் ஸ்ரீவாஞ்சியம் க்ஷேத்திரத்தை அடைந்து அங்கு தங்கி சிவ பெருமானை பூஜித்து வரலானான்.

எமனுக்கு தமிழ் நாட்டில் யாரும் தனியாக வழிபாடு செய்வதாகத் தெரியவில்லை. ஆனால் வட நாட்டினர் கொண்டாடும் தீபாவளிப் பண்டிகையில் ஐந்தாவது நாள் எம பூஜை செய்து முடிக்கிறார்கள்.

உயிர்கள் யாவற்றுக்கும் உடலைவிட்டுப் பிரியும்போது, எம வாதனை, பைரவர் வாதனை என்ற இரண்டு வாதனைகள் உள்ளதாக புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. காசியில் இறப்பவர்களுக்கு யம வாதனை கிடையாது, பைரவர் வாதனை உண்டு.

ஆனால் ஸ்ரீ வாஞ்சியத்தில் இறப்பவர்களுக்கு யம வாதனை, பைரவர் வாதனை ஆகிய இரண்டும் இருக்கக்கூடாது என்று நிபந்தனையுடன், யமதர்ம ராஜனை இத்தலத்தில் இருக்க ஸ்ரீ வாஞ்சிநாதர் ஒப்புக் கொண்டு, யமதர்மராஜனை இங்கு தனது வாகன மாகவும் ஏற்றுக் கொண்டார். இதனால் இத்தலம் காசியிலும் மேலானதாகும். கடைசி காலத்தைக் கழித்து இறப்பதற்காகவே பல வயோதிகர்கள் இங்கு வந்து தங்கி, வாஞ்சி நாதரை வழிபடுவதும் வழக்க மாய் இருந்து வருகிறது.

ராஜகோபுரத்துக்கு வடபுறம் அமைந்திருப் பது 'குப்த கங்கை'. தமிழ் நாட்டிலுள்ள பெரிய கோயில் திருக்குளங்களுள் ஒன்று; *440 அடி நீளம், 168 அடி அகலம் கொண்டதாகும்.*

கங்கா பாகீரதி, ஸ்ரீகாசி விசுவநாதரிடம் ''உலகோர், பாவங்களை கங்கையில் மூழ்கி என்னிடம் விடுவதால், அவைகளைத் தாங்க என்னால் முடிய வில்லை'', என்று முறையிட, ''ஸ்ரீ விஸ்வநாதர்'', ''கங்கையே! பூகைலாசம்'' என்று தக்ஷிண தேசத்தில் காவிரிக்குத் தென்பால் ஒரு தலம் உள்ளது. அதற்கு முனிதீர்த்தம் என்று பெயர்; நீ அங்கு போய் ரகசியமா (குப்தமாக) இருப்பாயாக! அப்போது உனது பாவங்கள் நீங்கும். அடியார்கள் வந்து, நீராடும்போது அவர்களது பாவமும் நீங்கும்; ஆனால் அது உன்னைத் தீண்டாது'', என்று அனுக்கிரகித்தார்.

உடனே கங்காதேவியானவள், தன்னிடமுள்ள ஆயிரம் கலைகளோடு புறப்பட, ஸ்ரீ விஸ்வநாதர் ''எல்லா கலைகளையும் நீ எடுத்துக் கொண்டு போனால், இங்கு நதி மட்டும்தானே இருக்கும்'', என்று கூற கங்கையும் ஒரு கலையை மட்டும் காசியில் வைத்து விட்டு, தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது கலைகளுடன் (999) ஸ்ரீ வாஞ்சியத்தில் வந்து வசிப்பதாகப் புராணம் கூறுகிறது.

காசியபர் முதலான முனிவர்கள், கலி தோஷத் துக்கு அஞ்சி, இத்தலத்தை அடைந்து, இங்கு நீராடி, கடுந்தவம் செய்து, வேண்டிய வரங்களைப் பெற்றமை யால், இது இந்த கலியுகத்தில் 'முனி தீர்த்தம்' எனப் பெயர் பெற்றிருக்கிறது. முந்திய யுகங்களில் இது முறையே, தூய புஷ்கரணி, அத்திரி தீர்த்தம், பராசர தீர்த்தம், என்ற பெயர்களுடன் விளங்கியதாம்.

இத்தலத்தில் நீராடும் பொருட்டு, காசி ராமேஸ்வரம், மகாமகம் முதலிய தீர்த்தங்களில் நீராடிய பலனை இங்கே அன்றைய தினம் அடைந்து விடலாம் என்றும் புராணம் கூறுகிறது.

இரண்டாவது கோபுரம் தாண்டியதும் அருள் பாலிக்கிறாள், 'மங்களநாயகி' அம்மன், இதரபெயர்கள் வாழவந்த நாயகி, பாக்கிய நாயகி' ஆகும்.

இத்தலத்தில் மரணம் அடையும் அனைத்து ஜீவராசிகளுக்கும், ஸ்ரீ வாஞ்சிநாதர் வலது செவியில், 'பிரணவோபதேசம்' செய்து மறு பிறவியில்லாமல் தன்னையே ஐக்கியப்படுத்திக் கொள்கிறார் என்று சொல்லப்பட்டுள்ளது. இங்கு எமதர்மரும், பைரவரும் அமர்ந்த நிலையில் தவம் செய்வதை நாம் காணலாம்.

இவ்வாலயத்தில் நவக்கிரகங்களுக்குத் தனி சந்நிதி கிடையாது. இங்கு எல்லா பெருமைகளும் வாஞ்சி நாதருக்கே உரியது. கோஷ்ட துர்க்கை, தவிர தனிச் சந்நிதியில் இடம் பெற்றுள்ள அஷ்டபுஜ துர்க்கை விசேஷம் பெற்றவள். இங்கு தல விருட்சம் 'சந்தன' மரம்.

முக்கியமான உற்சவங்களுள், மாசி மகம் சுவாமிக்கும், ஆடிப்பூரம் அம்பாளுக்கும், கார்த்திகை ஞாயிறு முருகனுக்கும் நடைபெறுகின்றன. உற்சவ மத்தியில் தீர்த்தோற்சவம் பொதுவாக எந்த ஆலயத்தி லும் நடைபெறுவதில்லை. ஆனால் இங்கு மாசி மக உற்சவத்தில் பரணி நட்சத்திரத்தில், (உற்சவ மத்தியில்) தீர்த்தோற்சவம் நடைபெறுகிறது. மகா உற்சவத்தன்று இரண்டாம் நாளான, 'பரணி' அன்று யமனையே வாகனமாகக் கொண்டு, ஸ்ரீ வாஞ்சிநாதர் தென் கிழக்கு மூலையிலுள்ள யம தீர்த்தத்தில், தீர்த்தம் கொடுப்பதும் தொன்றுதொட்டு நடந்து வருகிறது. தவிரவும் ஊரைச் சுற்றி, நாரத தீர்த்தம், லக்ஷ்மி தீர்த்தம், அக்னி தீர்த்தம், கைலாஸ தீர்த்தம் முதலிய தீர்த்தங்களோடு பிரதான தீர்த்தமான குப்தகங்கையும் அமைந்துள்ளது. எல்லா புண்ணிய காலத்திலும் முறைப்படி நீராடி சிவபெருமானின் அருளைப் பெற்றவர்களான புண்ணிய வான்கள் எண்ணில் அடங்கார்.

கார்த்திகை மாதம் பிரம்மோற்சவத்தில் ஐந்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் புலர்வதற்கு முன், சுவாமி தீர்த்தம் கொடுப்பதும், அதில் நீராடுவோர் பஞ்சமா பாதகங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள் என்பதும் ஐதீகம்.

இத்தலம் நன்னிலம் - குடவாசல் பேருந்து வழித்தடத்தில் நான்கு கிலோமீட்டர் நடந்தால் ஸ்ரீவாஞ்சியம் அடையலாம்.

இவ்விதம் தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகிய மூன்றாலும் பெருமை மிக்கதும், காசிக்கு வீசம் கூட உள்ளதுமான, ஸ்ரீமங்கள நாயகி சமேத ஸ்ரீவாஞ்சி நாத சுவாமி கோயிலுக்குச் சென்று அரும்பெரும் வரங்களைப் பெற்று, எமனையும் பைரவரையும் தரிசித்து, வாதனைகள் இன்றி உயிர் நீத்து, நற்கதி அடைய வேண்டுவோமாக...!!

***

கல்விச் செல்வம் பெற கைதொழுது வணங்கவேண்டிய கூத்தனூர் மகா சரசுவதியம்மன் திருக்கோயில்

- திருமதி **இராஜேஸ்வரி விஸ்வநாதன்**

உலகில் மற்ற தெய்வங்களுக்கெல்லாம் மூலை முடுக்குகளில் எல்லாம் திருக்கோயில்கள் அமைந்திருக்கின்றபோது, பிரம்மாவின் மனைவியான சரசுவதி தேவியாருக்கு மட்டும் திருவாரூர் மாவட்டம் கூத்தனூரில் மட்டும்தான் தனிக்கோயில் உள்ளது. இத்திருக்கோயிலில் ஒட்டக்கூத்தருக்கென்று தனி சந்நிதி இருக்கிறது. அன்னையை தரிசிக்கும் முன்னரே இவரை நாம் தரிசிக்கலாம்.

இரண்டாம் இராசராசன் ஆட்சிக்காலத்தில் ஒட்டக்கூத்தர் சோழ அரசின் அவைப்புலவராக இருந்தவர். அவைப்புலவரான ஒட்டக்கூத்தருக்கு சோழ மன்னரால் தானமாக வழங்கப்பட்ட இவ்வூர் கூத்தனூர் ஆயிற்று. வரகவியான ஒட்டக்கூத்தர் தம் நாவன்மையால் (அன்னை சரசுவதி தேவியின் அருட்கடாட்சத்தால்) வெட்டுண்ட செங்குந்தர் தலைகளை இந்தச் சந்நிதியில் ஒட்ட வைத்தாராம்.

கும்பகோணம் சாரங்கபாணி தீட்சிதர் என்பாரின் மகன் வாய்ப்பேசாதிருந்து கூத்தனூர் சரசுவதியம்மன் அருளால் விஜயதசமி நன்னாளில் பேச்சுத்திறன் பெற்றதும் இத்திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்து புருடோத்தம பாரதி எனப் போற்றப்பட்டதும் அண்மைக்கால வரலாறுகள்.

புராணங்களில் கூத்தனூர் வரலாற்றைப் பிரும்மாண்ட புராணத்தில் காணலாம். விடமுண்ட கண்டன் (சிவபெருமான்) கங்கை முடிசூடியோனாக இருந்த காலத்தில் முப்பெரும் முனிவர்களாம் பதஞ்சலி, வியாக்கிர பாதர், பாஸ்கரர் ஆகியோர் தில்லையில் கடுந்தவம் இருந்தனர். பதஞ்சலியும், வியாக்கிரபாதரும் சிவமோட்சம் அடைந்தபின்னர் பாஸ்கரர் மட்டும் கூத்தனூரை ஒட்டியுள்ள கௌரி வனம், வில்வவனம் என்ற பெயர்களைக் கொண்ட மகத்துவமிக்க வனப்பகுதியில் கடுந்தவத்தைத் தொடர்ந்தார்.

தாரகாசுரனின் தொல்லைகள் தாங்காது தேவர்கள் பிரம்மதேவரிடம் முறையிட்டார்கள். பூலோகத்தில் பார்வதி தேவியார் பர்வதராஜன் மகளாக அவதரித்து இறைவனையடைய கௌரிவனம் என்னும் வில்வ வனத்தில் (ருத்ரங்கையில்) மாதவம் புரிந்த வண்ணம் இருந்தாள். அதுசமயம் தேவர்கள், பாஸ்கரர், பார்வதி ஆகியோருக்கு அருள் செய்ய இறைவன் திருவுளம் கொண்டார். சிவன் பார்வதியை மணந்து கொள்ளும் முன் தன் சிரசில் உள்ள கங்கையை ஒரு பெண்ணாக்கி தானும் ஒரு அந்தணர் வடிவெடுத்து அந்தப் பெண்ணை கவனமாகப் பார்த்துக்கொள்ளச் சொல்லி பாஸ்கரரிடம் ஒப்படைத்தார். மேலும் பாஸ்கரரிடம் அவளை நீர்நிலைகள், ஆறு குளங்கள் ஆகியவைகளுக்குச் செல்லாமலும் பார்த்துக் கொள்ளுமாறு சொல்லிச் சென்றார்.

ஒருநாள் ஆசிரமம் அருகில் ஓடும் அரிசொல் ஆற்றில் (அரசலாற்றில்) நீராடச் சென்ற பாஸ்கரர் ஆசிரமத்தில் இருந்த அப்பெண் கங்கையைத் தனது ஆசிரமத்தில் விட்டுவிட்டு வந்துவிட்ட பாத்திரத்தை எடுத்து வரும்படிச் சொல்ல, அவளும் எடுத்து வந்து பார்த்தபோது ஓடும் ஆற்றைக் கண்டதும் அதில் இறங்கி கங்கையுடன் கலந்துவிட்டாள். அவளைக் காணாது பாஸ்கரர் தவிக்கவும், இறைவன் பார்வதியை மணந்து, குமரக்கடவுளைத் தந்து பின் அங்கு வரவும் சரியாக இருந்தது. இறைவன் பாஸ்கரருக்கு என்றும், கங்காதேவியே அந்தப் பெண் என்றும் சொல்லி, தேவர்கள், பார்வதி, கங்கை பாஸ்கரர் ஆகியோரை ஆட்கொண்டதை, தாரகாசுரனை அழித்ததை விளக்கினார். பாஸ்கரரைக் காத்து ஆபத்சகாயேஸ்வரராக அங்கு அமர்ந்தார். இத்தலமும் கூத்தனூர் போல பூந்தோட்டம் கிராமத்தின் ஒரு பகுதியே.

இவ்வாறு கங்கை கலந்த இடத்தில் பின்னர் சரசுவதி நதியும் கலக்கிறது என்பதையும் பிரும்மாண்ட புராணம் விளக்குகிறது.

ஒரு சமயம் பிரம்மலோகத்தில் பிரமதேவரும் மகாசரசுவதியும் தம் பீடத்தில் அமர்ந்து தேவாதி முனிவர்களுக்கு அருள் செய்து கொண்டிருந்தனர். தத்துவ விசாரம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிரம்மலோகத்தின் பேரழகை வானளாவ புகழ்ந்த வாக்தேவி, கலைவாணியாகி தான் வீற்றிருப்பது தான் பிரம்மபீடத்திற்குப் பெருமை எனக்கூற, பிரம்மலோக மகத்துவத்துக்குத் தான்தான் காரணம் என்று

பிரம்மா கூற, சாதாரண வாதம், விவாதமாகி, விவகாரம் ஆகி, விகாரமும் ஆனது. அதன் விளைவாக இருவரும் பூலோகத்தில் மானுடர்களாய் அவதரித்தனர். பூவுலகில் பிருகாந்தன் (பிரம்மா), சிரத்தை (சரசுவதி) இருவரும் உடன் பிறந்தவர்களாகப் பிறந்து, பின் தத்தம் பூர்வோத்திரம் நினைவிற்கு வர சிவனை வேண்டி உளங்கசிந்து துதித்தனர். ஓர் அசரீரி மூலம் பகுகாந்தன், சிரத்தைக்கு கிடைத்த தனித்தனி ஆணைப்படி கூத்தனூரில் கங்கையுடன் சரசுவதியும் அந்நதியின் ஓர் அம்சமாகி ருத்ரகங்கை ஆபத்சகாயர் - பரிமள நாயகிக்கு அபிடேக நீராகி, அத்துடன் கூத்தனூர் அரிசொல் நதிக்கரையில், மகா சரசுவதியாகக் கோயில் கொண்டாள். பிரம்மாவோ ஆபத்சகாயர் - பரிமள நாயகியை வழிபட்டு மீண்டும் தன் நிலையை அடைந்தார்.

இவ்வாறு பிரம்மாவும் சரசுவதியும் ருத்ர கங்கையில் இறைவனை வழிபட்டு, சாபங்களிலிருந்து விமோசனம் பெற்றதாகப் புராணத்தில் கூறப்பட்டுள்ளது. அதுமுதல் அரிசொல் நதியில் கங்கையுடன் சரசுவதி நதியும் கலந்து ஓர் அம்சமாகி விளங்குவாள் என்றும், அந்த ஆற்றின் தென்கரையில் (கூத்தனூரில்) கோயில் கொண்டு தனது ஞானப்பிரவாகத்தை அடியார்க்கு மகாசரசுவதி அளிப்பாள் என்றும் இறைவன் அருளினார்.

ஆனால் இறைவன் அடிமுடி காணுதலில் பொய்சொல்லிய பிரம்மாவுக்கு எங்கும் கோயில்கள் கிடையாது என்ற சாபம் மட்டும் தொடர்ந்தது. பிரம்மாவுக்கு எங்கும் தனிக்கோயில், தனி பூசை இல்லையெனினும், தர்ப்பணம் முதலிய பிதிர் கர்மங்களிலும் இனி பிரம்மபூசை விசேடமாக இருக்கும் என்றும் இறைவன் அருளினார். பித்ரு காரியங்களில் (இறந்த முன்னோர்களுக்கு செய்யும் கர்ம காரியங்கள்) பிரம்மபூசை ஏற்பட்ட வரலாறு இதுவே.

இத்தலத்தில் அதுமுதல் சரசுவதியை வழிபடுவோர், குறிப்பாக புரட்டாசி நவராத்திரியிலும், வைகாசி விசாகத்திலும் வழிபடுவோர் அன்னையின் அருட்கடாட்சத்திற்கு பாத்திரமாகிறார்கள். அதுபோலவே இத்தலத்தில் அதாவது கோவில் பத்து கூத்தனூரில் தொடங்கி ருத்ரகங்கை வரையான சுமார் இரண்டரை கிலோமீட்டர் தூரம் வரை அரிசொல் ஆற்றங்கரையில் (அரசலாற்றங்கரையில்) தர்ப்பணம் முதலிய பித்ரு கர்மங்களை மிகவும் விசேடமாக செய்து வருகிறார்கள். இங்கே மகாளய அமாவாசையன்று அதிகக்கூட்டம் இருக்கும்.

உண்மையில் பார்த்தால் பூலோக வாசிகளுக்கு அன்னை சரசுவதியின் அருட்பார்வையும், பிரம்மாவின் அருளால் பித்ருக்களுக்கு மோட்சமும் கிடைப்பதற்காகவே சரசுவதி தேவி - பிரம்மா சர்ச்சை நடந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

மேற்கண்டவாறு கங்கையும், சரசுவதியும் கலந்த இந்தத் திருத்தலத்தில் யமுனையும் சங்கமித்த வரலாற்றையும் பிரும்மாண்ட புராணம் கூறுகிறது.

கங்கை, யமுனை, சரசுவதி கலக்கும் இத்தலம் தட்சிண திரிவேணி சங்கமம் எனப்பெயர் பெற்றது.

பக்தர்கள் அவரவர் பாபங்களிலிருந்து விடுபெற இத்திரிவேணி சங்கமத்தில் நீராடுகிறார்கள். வடக்கே தொலைதூரம் சென்று அலகபாத் திரிவேணி சங்கமத்தில் நீராடும் புண்ணியம், பாக்கியம் இங்கே கூத்தனூரில், திரிவேணி சங்கமத்தில் நீராடுவதால் கிடைக்கிறது. இங்கு நீராடுவதால் கணவன் மனைவிக்கு இடையே ஏற்படும் பிரிவுகள், பிளவுகள் நீங்கி குடும்பம் ஒன்றாக இணைகிறது.

இது ஒரு பிரார்த்தனை தலமாகும். இங்கு பக்தர்கள் கல்வி கேள்விகளுக்காக, பல வித்தைகளுக்காக வேண்டிக்கொண்டு பிரார்த்தனையை நிறைவேற்றுகிறார்கள்.

இப்படி பலசிறப்புகள் கொண்ட மகா சரகவதியின் திருக்கோலத்தை ஞானரூபிணியின் வடிவத்தைக் காணக் கண்கள் கோடி வேண்டும். அன்னை சரசுவதி தேவியின் வடிவத்தை தேவி மகாத்மியம் கூறுகிறது.

வெள்ளை நிறத்தில் உடைதரித்து, வெள்ளைத் தாமரை மலரின்மேல் பத்மாசனத்தில் அமர்ந்திருக்கிறாள் அன்னை சரசுவதிதேவி. இடக்கீழ்க் கையில் புத்தகமும், வலக்கீழ்க்கையில் சின்முத்திரையும், வலமேல் கையில் அட்சரமாலையும், இடமேல் கையில் அமிர்த கலசமும் தாங்கியிருக்கிறாள். ஜடாமுடியும், துடியிடையும், கருணை புரியும் இருவிழிகளுடன் ஞான சட்சஸ் என்ற மூன்றாவது திருக்கண்ணும், புன்னகை தவழும் திருவாயுமாய் கிழக்கு முகமாக வீற்றிருந்து அன்னை மகாசரசுவதி அருளாட்சி புரிகிறாள்.

எங்கும் நிறைந்திருக்கும் இறைவனுக்கு எத்தனையோ திருவுருவங்களை அளித்து, அவனை கல்லிலும், சுவற்றிலும், சுண்ணத்திலும், வண்ணத்திலும் செதுக்கி, வரைந்து மகிழ்கிறார்கள். இப்படி இறைவனுக்கு உருவம் படைத்த நம்முன்னோர்கள் ஒவ்வொரு உருவத்திலும் ஒரு மகத்தான தத்துவத்தை

உள்வைத்துப் படைத்திருக்கிறார்கள் என்றால் அது பொருந்தும்.

அட்சர மாலையும், அமிர்த கலசமும் :

அன்னை சரசுவதி படைப்பின் நாயகி. ஆதலால் சிருட்டியின் அடிப்படையை உணர்த்தும், சப்தத்திற்கு (ஒலி) உருவம் கொடுக்கக்கூடிய எழுத்துக்களை (அட்சரங்களை) உணர்த்தும் வகையில் வல மேல் கையில் அட்சரமாலையைக் கொண்டிருக்கிறாள். நாம் உயிர் உள்ளவரை அட்சரம் பிசகாமல் பேசவேண்டும் என்பார்களே! அதுபோல் நம் நினைவோடு பேச, நம் நினைவோடு எழுத, படிக்க இப்படி எல்லாவற்றிற்கும் அன்னையின் அருள் வேண்டும்.

அம்பிகையின் நாமாக்களை நாள்தோறும் இடைவிடாமல் சொல்லி தியானிப்பதன் மூலம் அமிர்தமயமான ஞானத்தையும், அந்த ஞானத்தின் வாயிலாக முக்தி ஆனந்தத்தையும் நாம் அடையலாம் என்பதையும் குறிப்பால் உணர்த்துகிறது அன்னையின் கைகளில் உள்ள அட்சர மாலையும் அமிர்த கலசமும்.

புத்தகம்

கல்விக்கும் செல்வத்துக்கும் இவ்வுலகில் அதிக அவசியமும் மோகமும் உண்டு. நல்ல வாக்குக்கு மயங்காதாரும், நல்ல வருவாய்க்கு மயங்காதாரும் இல்லை என்று சொல்லலாம். அருங்கல்விக்கு நாயகி கலைமகள், பெருஞ்செல்வத்துக்கு நாயகி திருமகள், பெருவீரத்துக்கு நாயகி மலைமகள். முப்பெருந் தேவியர்க்கும் இடையே நடந்த திருவிளையாடல், கல்வியா, செல்வமா, வீரமா என்ற நாடகம் இங்கே நம் நினைவிற்கு வருகிறது. விஞ்ஞானத்துக்கும் மேற்பட்டது பரமஞானமும், பிரம்ம சொரூபமும் ஆகும். இதன் சின்னம் - அடையாளம் வேத புத்தகம். இந்தக் கருத்தை உணர்த்துபவளாகத்தான் அன்னை சரசுவதி தமது திருக்கரத்தில் புத்தகத்தை ஏந்திக் கொண்டிருக்கிறாள். அது ''கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு'' என்பதைக் குறிப்பதற்காக இருக்குமோ!

சின் முத்திரை

அருள்மிகு தட்சிணாமூர்த்தி சின்முத்திரையில் வீற்றிருப்பார். ஞானத்திற்கு உரிய கடவுள். அவரைப் போலவே தன்னை சரணடைந்தவர்களுக்கு ஞானத்தை அளிக்கும் பேரருட் சக்தியாக அன்னை மகாசரசுவதி வீற்றிருக்கிறாள்.

பசுவாகிய உயிர் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலத்தினின்றும் நீங்கிப் பதியை அடைய வேண்டும் என்னும் கருத்தை உணர்த்துவதே சின்முத்திரை. ஆன்மா மலத்தையகற்றி பரமாத்மாவை அடைய வேண்டும் என்பதும் அதுவே! ஞானாம்பிகையாகிய சரசுவதிதேவி உலக மக்களுக்கு வலக்கீழ்க்கை சின்முத்திரை மூலம் இதனை உணர்த்துகிறாள்.

அன்னை சரசுவதியின் திருக்கோலத்தை வடித்த முன்னோர்கள் கூறும் உட்கருத்து இதுதான். கல்வியறிவால் பதி பசு தொடர்பை உணர்ந்து, மும்மலங்களிலிருந்து விடுபடுவதற்காகத் தவத்தைச் செய்து, அதன்மூலம் அமிர்தமயமான ஞானத்தை உண்டு மகிழவேண்டும் என்பதுதான் என்றால் அது மிகையாகாது.

வாகனம்

அன்னை மகாசரசுவதியின் வாகனம் ஹம்சம் (வெண்மைநிற அன்னப்பறவை). அன்னப்பறவையின் குணம் நல்ல பாலை மட்டும் பிரித்து அருந்துவது. அதில் கலந்துள்ள நீரைவிட்டு விடும். அதுபோன்று பக்தர்களும் ஒருவருடைய குறைகளை எண்ணாது நல்லவற்றை மட்டுமே எண்ணி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை இந்தவாகனம் நமக்குச் சொல்கிறது. நம்மிடம் உள்ள குறைகளைக் களைந்து நீக்கிவிட்டு மிகச்சிறிதளவு நல்லது செய்தாலும் அதைக் கொண்டு நமக்கு அருள் புரிந்து, ஆதரவு தந்து, மோட்சம் அளிப்பாள் அன்னை என்பதையும் காட்டுகிறது.

நுழைவுத் தேர்வு எழுதுவதற்காக இங்கு வந்தும், தங்கள் இருப்பிடத்தில் இருந்துகொண்டும் அன்னை சரசுவதியிடம் வேண்டிக் கொள்கிறார்கள். வெற்றிபெற்றவுடன் தாங்கள் விரும்பிய பள்ளி கல்லூரியில் இடம் கிடைத்தவுடன் அன்னையை வந்து வணங்கி தங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றுகிறார்கள்.

அருள்மிகு மகாசரசுவதியம்மன் (ஞான பீடம்) அரிசொல் (அரசலாறு) ஆற்று நதிக்கரையில் அமைந்துள்ளது. மயிலாடுதுறை - திருவாரூர் ரயில் மார்க்கத்தில் பூந்தோட்டம் ரயில்நிலையத்திற்கு 1 1/2 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது கூத்தனூர். மயிலாடுதுறை திருவாரூர் பேருந்து தடத்திலும் பூந்தோட்டத்தில் இறங்கி சென்று அடையலாம். கும்பகோணத்திலிருந்து பூந்தோட்டம் வழியாக பேருந்து தடத்தில் வருவோர் ஆலயத்தின் அருகிலேயே உள்ள பஸ் நிறுத்தத்தில் இறங்கிச் செல்லலாம். பூந்தோட்டத்தின் ஒரு பகுதியே கூத்தனூர்.

***



மயிலையில் அருள்மிகு வீரபத்திரசுவாமி திருக்கோயில் திருக்குடநீராட்டு விழா 21.3.03 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களும், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல்தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் திருமிகு. டி. ஜெயக்குமார் அவர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டார்கள்.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் ஆலயத்திற்கு வருகை தந்த பொழுது திருக்கோயில் இணை ஆணையாளர் / நிர்வாக அதிகாரி அவர்களால் வரவேற்கப்படுகின்றார்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.